Released by Maran's Dog ,Toronto, Canada

Regd. No. 2875

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன்-37

ஆசிரியர்: மஹாவித்வான் P. B. அண்ணங்கராசாரியர்,

SRI RAMANUJAN

EDITOR:
Mahavidvan P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM

வருடச் சந்தா ரூ. 10 ஜீவித சந்தா ரு 25

Released by Maran's Dog ,Toronto, Canada

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வரம்பெருமாளூர் ஜீயர் திருவடிகளே சரணம்

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி – ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து

சித்தார்த்தி௵ சித்திரை௴ 1979 ஏப்ரல்௴

acharya.org

ஸ்ரீ ராமாநுஜன்-372

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான். P. B. அண்ணங்கராசாரியர்

தொகுதி 31 | சித்தார்த்தி௵ சித்திரைமீ | பகுதி 12

பாதுகா ப்ரேக்ஷணம்

ப்ரஹ்மஸ்ரீவ்யக்திவாங்நிரஸநம்

ச்லோ: ஸ்ரீவைஷ்ணவத்வேஷநிரூபணீய: ப்ரச்சந்நசைவோ குருவர்யவைரீ,
யத்யத் விசேயம் ஸஹஸா வ்யலேகீத் தத்தந்நிரஸ்யாமி ஸதாம் நியோகாத்,
பாதுகாபத்ரிகாப்ரேக்ஷகாஸ் ஸாதவோ வீதசோகா பவந்த்வேத தாலோகநாத்,
இத்யநர்க்காம்ரிரம்ப்ராதிசந்நாதராந் ஆண்டவன்ஸ்வாமிநாம்பாதபத்மாச்ரிதா:

ஏமது த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வ நூல் தோன்றினநாள் முதலாக ப்ரஹ்ம ஸ்ரீபதபூஷிதமாய் எண்டிசையுங் கண்ட வ்யக்திவிசேஷம் திடீரென்று உபயவேதாந்த வித்வானாக வேஷம்பூண்டது "புவியுள் நான் கண்டதோர் அற்புதங் கேளீர்", என்னத்தக்கதோர் அத்யத்புதம்; அந்த வேஷம்பூண்டது எதனால்? தன்னை நெடுநாளாக ஒதுக்கியிருக்கின்ற ஸயூத்யர்கள், ஸதாசார்ய தூஷணம் பண்ணினால்தான் நம்மைக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்வார்கள் என்ற கருத்தினாற் போலும். சொற்பொருள்களின் அபத்தங்களே வடிவெடுத்த கட்டுரையைக் காணபதும் பாதகம் அதைப் பொருள் படுத்திச் சில எழுதப் புகுவதும் பெரும்பாதகம் ஆயினும், ஸ்வாமி தேசிகன் பகவத் க்ருபைக்கு விசேஷணம் இட்டருளும்போது '.அவஸரப்ரதீக்ஷயான' என்று ஸாதிக்

acharya.org

கிறார்; அதேபோல் உலகுக்கு உண்மைப்பொருள்களை யுணர்த்துவதற்கு அவஸர மெதிர்பார்த்திருக்கும் நமக்கு ஸமயம் வாய்த்ததென்று மகிழ்ந்து எழுதுகிறோம்.

க்ரந்தங்கள் என்றெழுதுவதற்கு க்ருந்தங்கள் என்றெழுதுவது போன்ற அபத்தங்கள் எண்ணிறந்தவை. மணற்சோற்றில் கல்லாராய்வதை விட்டிடுவோம். தமிழ்நாட்டிலோ ஸம்ப்ரதாய ஸரணியிலோ நடையாடாத சொற்போக்குக்கள் அந்தோ! தலைவேதனை [ஸந்தாபயதி ...... ஆபாததலமஸதகம்] நம் ஆழ்வார்கள் ❈ கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்று ❈ ❈கருமமும் கருமபலனுமாகிய— என்றிப்படி நாறிடங்களில் அருளிச்செய்திருக்க. நீறுபூசிஞரோட்டை நெருக்கத்தாலே கருமாக்கள் கருமாக்களென்றே அழுவார்க்குக் கருமம் வலிதே போலும்.

ஸ்ரீமங்கிகமாந்த மஹாதேசிகனுக்கு எவ்வளவு பெருமைகளையெழுதினாலும் தகும், ஏற்கும். "வைஷ்ணவ ஸம்பிரதாயம் தேசிகனுக்கு மிகவும் கட்டுப்பட்டுள்ளது." என்று இத்தகைய அநந்விதமான அர்த்த மற்ற பேச்சுக்கள் "என் தாயார் திருவடியை ஆசாரியர் அடைந்தார்" இத்யாதிகள் போலே நகைச் சுவைக்கே இடமானவை. [கடன்பட்டுள்ளது என்னலாம்]

"வரலாற்று" "சூழ்நிலை" என்றித்தகைய பொருளற்ற சொற்கள் நிறைந்த இந்தக்கட்டுரையை மெச்சுபவர் ஒருவராவது உலகில் கிடைப்பரா? என்று ஒரு நண்பர் கேட்டார், அதுகிடக்கட்டும். எழுதுகிறுரிந்த ப்ரஹ்மஸ்ரீ "வைதிகர்கள் என்ற முறையில் வைதிக மதத்தை அப்படியே பின்பற்றி வந்தாலும் ராமாநுஜருடைய கருத்தை முழுவதும் புரிந்து கொள்ளாததால் சில குழப்பங்கள் தலைதூக்கின" என்றெழுதிவிட்டு உடனே திருவாருயிரப்படியென்கிற வியாக்கியானம் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பின்பற்றி நம்மாழ்வார்பாசுரங்களுக்கு எழுதப்பட்டுள்ள அழகான வியாக்கியானம், அது இருக்கும் காலத்திலேயே மேன்மேலும் வியாக்கியானங்களை எழுதியெழுதிப் பல குழப்பங்களை உண்டாக்கி விட்டார்கள்" என்கிறது இந்த அரஸிகக் குடுக்கை, உண்மை கேண்மின்; "இப்படியெழுதிவிட்டால் நம்மை [கோஷ்டீ பஹிஷ்க்ருத:] என்னும்படி ஒதுக்கி வைத்திருப்பவர்களெல்லாரும் திருவுள்ள முகந்திடுவர்கள் என்றும், போஜன பங்க்தியில் தன்னைச் சேர்த்துக் கொள்வார்களென்றும் ஆசைகொண்டது பாவம்! இந்த ப்ரச்சந்நபஸ்ம மதாரி. இப்போது நாம்கேட்கிற கேள்விகளுக்கு நின்று விடையிறுக்க முடியுமா?

acharya.org

மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் — "தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளான், எதிராசர் பேரருளால் — உள்ளாரு மன்பு—னே மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது. இன்பமிகுமாறுயிரம்" என்கிற பாசுர மருளிச் செய்வதற்கு முன்பு பிள்ளான் ஆறுயிரப்படியருளிச் செய்துள்ளாரென் பதை ஒருவருமறிந்திரார் என்பதை ஆணையிட்டுரைப்பேன். தேசிகன் பெரியவாச் சான் பிள்ளையருளிய இருபத்து நாலாயிரப்படியைக் குருமுகமாக அதிகரித்து தாத்பர்யரத்நாவளியும் ஸாரமும் அருளிச் செய்திருக்கிறாரென்பதை முப்பது நூல்களில் யான் விரிவுக்கஞ்சாமல் முதலித்திருக்கிறேன். அஹோபிலமடம் ஆஸ்தானவித்வானும் ப்ராமாணிகட்சூடாமணியுமான ஸ்ரீமதுபயவே. திருக் கன்னம் நரஸிம்ஹராகவாசாரியர் ஸ்வாமி எழுதி வெளியிட்டிருக்குமொரு கட்டுரையில் — "தேசிகனிடம் சிலர் வந்து 'தேவரீர் எல்லாவற்றுக்கும் வியாக்கியா னம் ஸாதித்தருளுகிற முறையில் திவ்யப்பிரபந்தங்களுக்கும் வியாக்கியானமிட்ட ருளலாகாதா?' என்று விண்ணப்பம் செய்ய, அதற்கு ஸ்வாமி தேசிகன் என்ன விடை கூறினாரென்பதை முன்னம் தெரிவித்திருக்கிற அந்த திருக்கன்னம் ஸ்வாமி யே மீண்டும் தெரிவித்தருளட்டும். அல்லது இந்தப் ப்ரச்சந்ந பஸ்மதாரி அந்த மஹநீயரையடிபணிந்து தெரிந்து கொள்ளட்டும். அது நிற்க தேசிகன் பெரிய வாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களை எத்தனை யிடங்களில் கையாண்டிருக் கிறாரென்பதை இந்தக் குடுக்கையின் உள்ள முணராதா? த்ரமிடோபநிஷத்தாத் பர்ய ரத்நாவளியும் ஸாரமுமிருக்கட்டும் ஸ்ரீ மத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியான பங்க்தியை உதாஹரித்தருளியிருப்பதுமிருக்கட் டும். திருவாய்மொழியில் (4-5-6) கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்" என்ற பாசுரத்தைக் கொண்டு சில பஸ்மதாரிகள் தேசிகனிடம் வந்து வாதிக்க, தேசிகன் என்னவிடை கூறினாரென்பது ஸச்சரித்ரரக்ஷையில் ஸுஸ்பஷ்டம் "அஞ்ஜநபரத்வமாஹுராசார்யா:" என்றருளிச் செய்திருப்பதைக் காணக் கண் ணில்லையா? (தேசிதாஹு:) என்றுரல்லர் (தேசிதாசார்யா ஆஹு) என்றுரு மல்லர். தாம் காலக்ஷேபக்ரந்தமாகக் கொண்டு ஸதாசார்யர் பக்கலிலே கேட்ட இருபத்து நாலாயிரப்படியிலுள்ள பொருளை யெழுதும் பிரகரண மாகையாலே ஆத்மவிப்ரலம்பத்திற்கு மிகமிக அஞ்சி "ஆசார்யர்கள் அருளிச் செய்தார்கள்" என்றே ஸாதித்தருளினராயிற்று.

"மேலும் மேலும் வியாக்கியானங்களை யெழுதியெழுதிப் பல குழப்பங் களையுண்டாக்கி விட்டார்கள்" என்றெழுதுகிற இந்தக் குடுக்கை ஒரு குழப் பத்தையாவது எடுத்துக்காட்டட்டுமே. ஒரு வியாக்கியானத்தையும் பாராமலும் மூலத்திலும் ச்ரத்தை கொள்ளாமலும் "நக்நங்க்ருத்யோருமுப ப்ரவர்த்தயதி"

acharya.org

மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் —"தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளான், எதிராசர் பேரருளால்—உள்ளாரு மன்பு—னே மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது. இன்பமிகுமாறுயிரம்" என்கிற பாசுர மருளிச் செய்வதற்கு முன்பு பிள்ளான் ஆறுயிரப்படியருளிச் செய்துள்ளாரென் பதை ஒருவருமறிந்திரார் என்பதை ஆணையிட்டுரைப்பேன். தேசிகன் பெரியவாச் சான் பிள்ளையருளிய இருபத்து நாலாயிரப்படியைக் குருமுகமாக அதிகரித்து தாத்பர்யரத்நாவளியும் ஸாரமும் அருளிச் செய்திருக்கிறரென்பதை முப்பது நூல்களில் யான் விரிவுக்கஞ்சாமல் முதலித்திருக்கிறேன். அஹோபிலமடம் ஆஸ்தானவித்வானும் ப்ராமாணிகபட்டதமணியுமான ஸ்ரீ மதுபயவே. திருக் கள்ளம் நரஸிம்ஹராகவாசாரியர் ஸ்வாமி எழுதி வெளியிட்டிருக்குமொரு கட்டுரையில்—"தேசிகனிடம் சிலர் வந்து 'தேவரீர் எல்லாவற்றுக்கும் வியாக்கியா னம் ஸாதித்தருளுகிற முறையில் திவ்யப்பிரபந்தங்களுக்கும் வியாக்கியானமிட்ட ருளலாகாதா?' என்று விண்ணப்பம் செய்ய, அதற்கு ஸ்வாமி தேசிகன் என்ன விடை கூறினுரென்பதை முன்னம் தெரிவித்திருக்கிற அந்த திருக்கன்னம் ஸ்வாமி யே மீண்டும் தெரிவித்தருளட்டும். அல்லது இந்தப் ப்ரச்சந்ந பஸ்மதாரி அந்த மஹநீயரையடிபணிந்து தெரிந்து கொள்ளட்டும். அது நிற்க தேசிகன் பெரிய வாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களை எத்தனை யிடங்களில் கையாண்டிருக் கிருரென்பதை இந்தக் குடுக்கையின் உள்ள முணராதா? த்ரமிடோபநிஷத்தாத் பர்ய ரத்நவளியும் ஸாரமுமிருக்கட்டும் ஸ்ரீ மத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியான பங்க்தியை உதாஹரித்தருளியிருப்பதுமிருக்கட் டும். திருவாய்மொழியில் (4-5-6) கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்" என்ற பாசுரத்தைக் கொண்டு சில பஸ்மதாரிகள் தேசிகனிடம் வந்து வாதிக்க, தேசிகன் என்னவிடை கூறினுரென்பது ஸச்சரித்ரரக்ஷையில் ஸுஸ்பஷ்டம் "அஞ்ஜநபரத்வமாஹு: ராசார்யா:" என்றருளிச் செய்திருப்பதைக் காணக் கண் ணில்லையா? (தேசிதாஹு:) என்றுரலர் (தேசிதாசார்யா ஆஹு:) என்றுரு மல்லர். தாம் காலக்ஷேபக்ரந்தமாகக் கொண்டு ஸதாசார்யர் பக்கலிலே கேட்ட இருபத்து நாலாயிரப்படியிலுள்ள பொருளை யெழுதும் பிரகரண மாகையாலே ஆத்மவிப்ரலம்பத்திற்கு மிகமிக அஞ்சி "ஆசார்யர்கள் அருளிச் செய்தார்கள்" என்றே ஸாதித்தருளினுராயிற்று.

"மேலும் மேலும் வியாக்கியானங்களை யெழுதியெழுதிப் பல குழப்பங் களையுண்டாக்கி விட்டார்கள்" என்றெழுதுகிற இந்தக் குடுக்கை ஒரு குழப் பத்தையாவது எடுத்துக்காட்டட்டுமே. ஒரு வியாக்கியானத்தையும் பாராமலும் மூலத்திலும் ச்ரத்தை கொள்ளாமலும் "நக்நங்க்ருத்யோருமுப ப்ரவர்த்தயதி"

"நமா யபதி கச்சந" "ஆஹதம் கபே பஸோ நிஜல்குலீ தாணிகா" இத்யாதிகளை உருப்போடுவதொன்றொழிய வேறொன்றும் நானறியேனென்றிருக்குமிக்குடுக்கை விரலுக்குத் தகாத வீக்கங்கொள்வது தகாது தகாது தகாது. ஸ்ரீமதாண்டவன் திருமுன்பே ஒரு ஸபை கூட்டி உபபாதிக்கக் கூடுமா இக்குடுக்கை? பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை தேசிகன் உபஜீவித்தருளவில்லை என்பதொன்றையாவது நின்று பேசவல்லதோ இது?

ப்ரஸங்காத், வேதபாஷ்யகாரர்களான பட்ட பாஸ்கரரும் ஸாயணரும் தங்களது வேதபாஷ்யங்களில் குழப்பங்களையுண்டாக்கியிருப்பது அபரிமிதம் என்பதை நாம் எந்தக்ஷணத்திலும் எந்தஸபையிலும் மூதலிக்க வல்லோம் இங்கேயிப்போதே மூதலிக்கிறேன் வைதிகவுலகங்காண.

வேதபாஷ்யகாரர்களால் நேர்ந்த குழப்பங்கள்

வேதத்திற்கு பாஷ்யம் செய்ய வேண்டுமானால் பதபாடத்தை யநுஸரித்தே செய்யவேண்டும். அர்த்தநிர்ணயத்திற்காகவே பதபாடம் அவதரித்தது அன்றியும் ஸ்வரஸந்நிவேசத்தை அடியொற்றியும் பாஷ்யம் செய்யவேண்டும் இந்த நியமத்தைக் கடந்து பட்டபாஸ்கரரும் ஸாயணாசார்யரும் பாஷ்யம் செய்திருப்பதை நான் பலவிடங்களில் நிரூபித்திருக்கிறேன். வேதபாஷ்ய விமர்சமென்றும், பதபாடபரித்ராணமென்றும் நான் இயற்றியுள்ள நூல்கள் ஆஸேதுசீதாசலம்பரவியுள்ளன இங்கு அப்படி யெழுதிவிடுவதில் பயனில்லை; பிஷ்டபேஷணமானாலும் இங்கேசில விடங்களை எடுத்துக்காட்டுகிறேன் (ஸாத்யா:) என்பது ஒரு பதம் அது பல விடங்களில் விஸர்க்காந்தமாக ஓதப்படுகிறது. (ஸாத்யா ஸந்தி தேவா) என்பது போன்றஇடங்களில் தேவா: என்பதற்கு ஸாத்யா என்கிறபதம் விசேஷணமாகையாலே இது விஸர்க்காந்தமென்பதை எளிதாக அறிவர். இது விஸர்க்கமில்லாமல் ஒரே ஒரு இடத்தில வருகிறது (யாஹி ஸாத்யா ஹவிரதந்து தேவா:) ஐந்தாவது காண்டம் முதல்ப்ரச்னத்தின் முடிவான இந்தவாக்கியத்தில் (தேவா)என்கிறபதம் இருக்கச்செய்தேயும் ஸாத்யாபதம் விஸர்க்க சூந்யமாகவே பதபாடத்தில் ஓதப்படுகிறது. இங்கு ஸாத்யா என்பதற்கு ஸாது என்று அர்த்தமென்றும் வேறுவகையாகவும் பட்டபாஸ்கரர் எழுதியுள்ளார். ஸாயணாசார்யர் விஸர்காந்தமாகவே ப்ரமித்துப்(பூஜ்யா தேவா;) என்று அர்த்தமெழுதிவிட்டார். இதனால் ஸாயணாசார்யர் பதபாடமோதவில்லையென்பது ஸ்பஷ்டமாகிறது. இது ஓரிடமன்று. வருந்தத்தக்க இடங்கள் பலபல. தேசிகன் உச்சிமேல் வைத்து மெச்சின பெரியவாச்சான்

acharya.org

பிள்ளை வ்யாக்யானத்தில் ஒரு குழப்பமும் கிடையாதென்றும், வேதபாஷ்யங்களில் தான் பலபல குழப்பங்கள் உண்டென்றும் காட்டுவது இப்போது நமக்கு உத்தேச்ய மாகையாலே அதற்காக இன்னமும் காட்டவேண்டியதாகிறது. நாலாவதுகாண்டம் நாலாவது ப்ரச்நத்தில் (தே க்ரீடயோ அநயோ ப்ராஜத்ருஷ்டய:) என்றுள்ளது (ப்ராஜத்ருஷ்டய இதி ப்ராஜத் ருஷ்டய) என்று பதபாடத்தில் அவக்ரஹமோதப் படுகிறது இங்கு ப்ராஜ தீப்தி த்ருஷ்டி: யேஷாம் தே என்று ஸாயணபாஷ்யம். பட்ட பாஸ்கர பாஷ்யம் நாலாவது காண்டத்துக்கு லுப்தமாகையால் அவர் எப்படி பாஷ்யமெழுதினரோ அறியோம் (ஸாத்யா) என்கிற இடத்தில் சிறிது மயங்கலாம்; இந்த இடம் அப்படிப்பட்டதா? என்று வைதிகர்கள் விமர்சிக்க வேணும். நாம் நாலாவது காண்டத்தையும் ஐந்தாவது காண்டத்தையும் தேடியோடவேண்டாம். முதல்காண்டத்திலேயே இரண்டாவது ப்ரச்நத்தில் (அஸ்வப்நஜஸ் தரணயஸ். ஸுசேவா அதந்த்ராஸோவ்ருகா அச்ரமிஷ்டா:) என்பது ஒரு வாக்கியம். இதில் எல்லா பதங்களும் பஹுவசநாந்தம் (அஸ்வப்நஜ:) ஒருபதம் மட்டும் ஏகவசநாந்தமாகக் காண்கையாலே இது ச்சாந்தஸவிபர்யயமென்றிட்டு பஹுவ சநார்த்தமே எழுதினர் ஸாயணர். உண்மையில் இந்த பதம் ஏகவசநாந்தமா? பஹுவசநாந்தமா? என்பதை அடுத்தபடியாக விசாரிப்போம். பட்ட பாஸ்கரர் (அகாராந்த) அஸ்வப்நஜ சப்தமாகக் கொள்ளாமல் அஸ்வப்நக் அஸ்வப்நஜௌ அஸ்வப்நஜ: என்று ரூபங்கொண்டு ச்சாந்தஸ விபர்யயமாக அல்லாமல் இயற்கை யாகவே பஹுவசநாந்தமென்று பாஷ்யமிட்டார். ஆனால் இது பதபாடத்திற்குச் சேராதென்று தாமே எழுதி ஸாயணாசார்யருடைய வழியையே பின்பற்றினர். இங்கு ஆழ்ந்து ஆலோசித்தால் அஸ்வப்நஜ இத்யஸ்வப்ந—ஜ என்று ஓதிவைத்த பதபாடமே பிசகு என்று சொல்ல வேண்டியதாகும் போலும். அந்த பாபம் நமக்கு வேண்டாம்; பாஷ்யகாரர்கள் குழப்பினர்களென்பதற்கு இது போதாதா? பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யானத்தை இவர் ஸேவித்தவராயிருந்தால் இங்ஙனே ஒரு குழப்பமாவது காட்டட்டும். ஆனால் இவ்வளவோடு நாம் விட்டு விடமாட்டோம், வேதபாஷ்யகாரர்களிடத்தில் நமக்கும் ப்ராவண்யமுண்டு; இந்தப்ரஹ்மஸ்ரீ த்ராவிட வேத த்வேஷிமட்டுமல்லாமல் ஸம்ஸ்க்ருத வேதத்வேஷி யும் என்பதை ஸ்ரீ ராமானுஜன் 371ல் நிரூபித்திருக்கிறேன் அது நிற்க.

(வாஜயந்த:) என்பது ஒரு பதம். இதற்கு ஸ்வரபேதமுண்டு. வாஜயந்த: என்பதில் யகாரம் எங்கு உதாத்தமாக ஓதப்படுகிறதோ. அங்குமட்டுமே அவக்ர ஹ பாடம்; அந்த யகாரம் எங்கு ஸ்வரிதமாக ஓதப்படுகிறதோ அங்கு வேஷ்டநம் கிடையாது; இந்த வாசிக்குக் காரணம் அர்த்த பேதமேயாகும். இந்த அர்த்த பேதத்தைச் சிறிதும் காட்டாமலேயே உபய பாஷ்யங்களும் தோன்றியுள்ளன.

acharya.org

ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீமதாண்டவனும் அடியேனும்.

நாலைந்து ஸம்வத்ஸரங்களுக்குமுன் ஸ்ரீமதாண்டவன் சென்னை மாநகரில் எழுந்தருளியிருந்தபோது அடியேன் திருவடிதொழ விடைகொண்டு, அப்போது திருவயிந்திரபுரத்து அவ்யபதேச்யனொருவன் ஸ்ரீரங்கநாதபாதுகா பத்ரிகையில் 'தென்னாசார்யர்கள் கவிபுருஷாவதாரம்" என்று ஒரு கட்டுரை யெழுதிப் பிரசுரித்திருந்ததை ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதியில் காட்டி "இது ஸ்வாமி திருவுள்ளத்திற்கு உகப்பானதுதானோ?" என்று வினவ, ஸ்வாமி அக் கட்டுரையைக் கடாக்ஷித்தருளித் திருவுள்ளம் மிகநொந்து "இதை நான் இப்போதுதான் காண்கிறேன்; இனி பாதுகாவில் வெளிவரும் கட்டுரைகளை முன்னடி நான் பார்த்தே வெளியிடச்செய்கிறேன்; பெரும்பாலும் கட்டுரைகளை நானே எழுதிப்பிரசுரம் செய்விக்கிறேன்" என்று அருளிச் செய்தாயிற்று. இதற்கு மேல் நிகழ்ந்தவை ஸ்ரீவைஷ்ணவஸுதர்சந பத்திரிகை மூலமாகவும் ஸ்ரீராமானுஜன் மூலமாகவும் வெளிவந்தவை பெரும்பாலோர்க்கு நினைவிலிருக்கும் ப்ரக்ருதம். ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் பரிகணிக்கத் தகாதவொரு நபர் திவ்ய ப்ரபந்த வ்யாக்யாதாக்களான மஹாசாரியர்களைப் பற்றி ப்ரஸங்கிக்கையில் அப்ரஸக்தமாக எழுதியுள்ள அஸம்பத்தப் பேச்சுக்களைக் கீழேகாட்டியிருக்கிறேன். அந்த நபர் ஸ்ரீமதாண்டவன் திருவடிகளிலும் அபசாரப்பட்டு நிக்ரஹ பாத்திரமாயிருந்த (அல்லது) இருக்கிற விஷயம் உலகமறிந்தது. (அது நிற்க) ஸ்வாமி தேசிகனும் ஆசார்ய ப்ரதிபத்திபாத்ரமாகக் கொண்ட பரமாசார்யர்களைப்பற்றி லாகவமாக எழுதியுள்ள கட்டுரைக்கு பாதுகையில் இடமளிப்பது நியாயமா? என்றவினவுக்கு ஸ்வாமிதாமே ஒரு ஸமாதானக்கட்டுரை அருள வேணும் அல்லது, பெரியவாச்சான் பிள்ளையும் வேதாந்த தேசிகனும் என்கிற மேல்வரும் என துவியாஸத்தையாவது பாதுகையில் வெளியிட்டு மனச்சாந்திபெறுவிக்கவேணும் (அல்லது) மேலே கண்ட வியாஸம் யுக்தமா? அன்று என்பது பற்றி ஸ்வாமி தம் திருக்கையால் ஒரு கட்டுரை பரமக்ருபையுடன் அநுக்ரஹித்தருள வேணும். மேலேப்ரஸ்தாவித்த கட்டுரையின் ஸாரமாவது தேசிகனருளிச் செய்த த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னாவளியும்ஸாரமும் பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படியைத் திருக்கையில் வைத்துக் கொண்டே எழுதப்பட்டவென்பதாம் [அந்தக் கட்டுரையை இதோ காணீர்]

பெரியவாச்சான் பிள்ளையும் வேதாந்ததேசிகனும்.

திருவாய்மொழிக்குப் பெரியவாச்சான்பிள்ளையருளிய இருபத்துநாலாயிரப் படியின் அவதாரிகையில் "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம!

acharya.org

பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் என்கிற யமவசனத்தின் படியே பாஷாவிசேஷம் பகவத்விஷய மொழிய..." இத்யாதி ஸ்ரீஸூக்திகளை தேசிகன் தாத்பர்யரத்நாவளியில் "பாஷாகீதி: ப்ரசஸ்தா பகவதி வசநாத்..." என்று ச்லோகமாக மொழிபெயர்த்தார். அன்றியும், ஆழ்வார்க்கு ஸ்த்ரீபாவனை கூடுமோ? என்கிற சங்கையிலே 'பாஞ்சால்யா: பத்மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந் த்யா ஜகநம் கநம், யாஸ் ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா பும்பாவம் மநஸாயயு:" என்கிற மஹாபாரத விராடபர்வச்லோகத்தை எடுத்துக்காட்டி ஸமாதானம் பண்ணியிருப்பதைக் கண்ட தேசிகன் இதனைத் தாத்பர்யரத்நாவளியில் "பாஞ்சாலீகாத்ரசோபா ஹ்ருத நயந வதூவர்க்க பும்பாவநீத்யா பத்யௌ பத்மா ஸஹாயே ப்ரணயிநி பஜத: ப்ரேயஸீபாரதந்த்ர்யம்" என்று மொழிபெயர்த் தருளினார் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் 'குலந்தருமென்கிற பாட்டிலே அபி யுக்தர் வ்யாக்யாநம் பண்ணினார்கள்" என்கிற ஸ்ரீஸூக்தியில்லாவிடில், பெரியவாச்சான்பிள்ளை, த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளியைக் கடாக்ஷித்தே இவ்வார்த்தைகளை எழுதினாரென்று தாராளமாகச் சொல்லிவிடலாம். "அஞ்ஜஸ பரதா மாஹாசாரியா:" என்கிற ஸச்சரித்ரரக்ஷா ஸ்ரீஸூக்தியும் இவ்விரு வருடையவும் பௌர்வாபர்யத்தை விலகாட்டித்தருமே. தேசிகனுடைய ஸ்தோத்ரபாஷ்யம் முழுவதிலும் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்கள் பெரும்பாலும் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்தோத்ரவ்யாக்யாநத்திலிருந்து உபாத்தமானவை என்பதை ஸமீபகாலத்தில் ஸ்ரீராமாநுஜனில் விவரித்துள்ளேன் இதில் விவாதம் விளைந்தால் லோகோபகாரம் பெரிதுமுண்டாம்.

தேசிகன் உபஜீவித்த ஸ்ரீஸூக்திகள் பெரியவாச்சான்பிள்ளையினுடையவை மட்டுமல்ல; பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயத்திலிருந்தும் உபஜீவித் துள்ளாரென்பதைச் சிறிதே உபபாதிக்கக் காண்மின். ஆசார்யஹ்ருதயத்தில் "தமிழ்மாமுனிதிக்கு சாண்யமென்றவர்களாலே க்வசித்க்வசித்தென்று இவரா விர்ப்பாவம் கலியுங்கெடும்போலே ஸூசிதம்" என்பது ஒரு சூர்ணிகை; இதில் க்வசித் க்வசிந் மஹாபாகா இத்யாதி ஆர்ஷவசநங்கள் உதாகரிக்கப்பட்டுள்ளன இதைக் கண்ட தேசிகன் குருபரம்பராஸாரமென்னும் ரஹஸ்யத்தில் 'இத்தைக் கணிசித்து கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:, க்வசித் க்வசிந் மஹா பாகா த்ரமிடேஷு ச பூரிச:, தாம்ரபர்ணீ நதியத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ என்று மஹர்ஷியும் அருளிச்செய் தான்" என்று அநுவதித்தருளினார். அந்த ச்லோகங்கள் அவ்வாசிரியர்க்கு முற் பட்டவர்களால் உதாஹரிக்கப்படவில்லையென்பது நினைவிலிருக்கட்டும். இதனிலும்

acharya.org

முக்கியமானதொரு விஷயம் கேளீர். ஆசார்ய ஹ்ருதயத்தின் முதல் ப்ரகரணத்தின் முடிவில் "மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே நூற்கடற் சொல் இவர்வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோபஜீவ்யமாமே" என்ற சூர்ணை உள்ளது இதை அந்த குருபரம்பரா ஸாரத்திலேயே "மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வர்க்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும்" என்று பரிபூர்ணாநுவாதம் செய்துள்ளார். இதில் ஸர்வோபஜீவ்யமென்ற சொல்லின் சுவையை அனுபவிக்க வேணும்; ஆசார்யஹ்ருதயஸூக்தியேயன்றோ அது.

ஜரத்கவாதிவாக்யார்த்தமென்று ஒன்றுண்டு. அது எதுவென்றால் இது தான்: "பல குழப்பங்களை உண்டாக்கி விட்டார்கள்" என்றவுடனே "வியாக்கியானங்கள் தனித்த முறையில் ஒரு அழகான க்ரந்தம் என்பதில் ஆக்ஷேபமில்லை அதுவும் ஸ்ரீமத்ராமாயண ச்லோகங்களுக்கு விளக்கங் கூறுவதில் அவை அஸாதாரணமான பெருமையோடு விளங்குகின்றன. ஆனால் வேதந்தமிழ் செய்த மாறன் அருளிச் செயல்களுக்கு விளக்கங் கூறுகையில் வேதவாக்கியங்களை உபயோகிக்காமல் உரையெழுதியது ஒரு கிராத குறை எனினும் உரைகளின் பெருமையைக் குறித்து மதிப்பிட முடியாது" என்றெழுதுகிறது இந்த அரசிகக்குடுக்கை. குறை கூறவும் இது அதிகாரியன்று. நிறை கூறவும் இது அதிகாரியன்று. அரசாணிபாலை வேங்கடாத்வரி ஸுபாஷித கௌஸ்துபத்தில் இந்த குடுக்கைக்காகவே ஒரு ச்லோகம் அற்புதமாக இயற்றியுள்ளார்; "வாசாடோக்தௌ வாக்ருதே வா ஸுகவீநாம் ஸ்தோகப்ரஜ்ஞாஸ் துல்யத்ருசோ ஹந்த! பவந்தி. கோமாயூநாம் கோகிலயூநாமபி சப்தேஷு ஏகாகாரா மாநஸவ்ருத்திர் மஹிஷாணாம்." என்பதாமது. ஆறாயிரப்படியையும் கண்டதன்றிது, மற்ற படிகளையுங் கண்டதன்றிது. இப்படிகளை ஸமீபகாலத்தில் கேட்டிருக்கும். 'திருவாறாயிரப்படியென்றெழுதிவிட்டால் ஆண்டவன் திருவுள்ளம் குளிரும் என்று கொண்டது பாவம்! அதையும் வழுவற எழுதத்தெரியாமல் [இடையின வல்லினவாசியறியாமல்] திருவாராயிரமென்றெழுதுகிறது. "திருவல்லிக்கேணிக்குப் போயிருந்தேன்; அங்கே கடலில் கண்ணுக் கெட்டினவரையில் பொட்டு ஜலம் கிடையாது" என்றானும் அந்தகனொருவன். கிம் கநிஷ்ட:? கிமு ஜ்யேஷ்டஸ் தஸ்யாஸௌ குருதாஷக:?

ஆண்டவன் திருவடிகளை அன்புடன் போற்றும் ப்ராமாணிகர்களுக்கு ஒன்றே காட்டுகிறேன் "வேதந்தமிழ் செய்த மாறனருளிச் செயல்களுக்கு விளக்கங் கூறுகையில் வேதவாக்கியங்களை உபயோகிக்க வேணும்" என்கிற குடுக்கையை விட்டிட்டு உங்களுக்குக் காட்டுகிறேன். திருவாய்மொழியில் (1-8-3)

acharya.org

"கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார் வேங்கட விண்ணோர்வெற்பனே" என்ற பாசுரம் *சக்ஷுர் தேவாநாம் உத மர்த்யநாம்* என்கிற வேதவாக்கியத்தையுட்கொண்டது இந்த வேதவாக்கியத்தை நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களில் ஸேவியுங்கள்; ஆறாயிரப்படிவியாக்கியான ஸூக்தி

"[கண்ணாவான்] அந்த ஐச்வர்யத்தின்மேலே அயர்வறுமமரர்க்கும் இந்த லோகத்திலுள்ள ஆத்மாக்களுக்குமொக்க த்ருஷ்டி பூதனாய்க் கொண்டு அயர்வறுமமரர்களுக்கும் ப்ராப்யமான திருமலையிலே நிற்கையாகிற மஹாஸம்பத்தையுடையனாயிருக்குமென்கிறார்" —இவ்வளவேயுள்ளது.

—மேலே குடுக்கை எழுதுவதாவது—

"ஒரு அதிவாதி எம்பெருமானுடைய திருமுகமண்டலம் இடைச்சி தயிர் வெண்ணெயின் மொச்சநாற்றமுடையது என்று கூறினார் இதை ஸஹிக்காத ஸ்வாமி தேசிகன் 'திருமுகமண்டலம் க்ருஷ்ணவதாரத்தில் வேதவாசனை நிறைந்தது என்கிறார்' என்று குடுக்கை எழுதுகிறது ஸுஸ்பஷ்ட தேசிக திவ்யஸூக்தி தூஷணமேயானவிதனை ஸ்ரீமதாண்டவன் எங்ஙனே ஸஹித்திருக்கிறபடியோ? தேசிகனருளிச் செய்த முநிவாஹநபோக மென்பது அமலனாதிபிரான் வியாக்கியானம் அதில் இறுதிப்பாசுரத்தில் *வெண்ணெயுண்டவாயன்* என்று ப்ரதீகமெடுத்து "ஆச்ரிதருகந்த த்ரவ்யமெல்லாம் தனக்கு உகப்பென்னும்படி தோற்ற அவர்களிட்டிய வெண்ணெய் *சூட்டு நன்மாலையிற்படியே அப்ராக்ருதபோகம் போலே அநுபவித்து அத்தாலே * இப்போதும் குணுங்கு நாறும்படியான திருமுகத்தையுடையவன்" என்று ஸாதித்துள்ளார்; யார்? நம் தேசிகன்; நம்மதேசிகன். இதனை ஸஹிக்காதவர் யார்? இந்தக் குடுக்கை.

மத்யசாலையின் வாசலில் மகன் நிற்கக்கண்டு ஸஹியாத தந்தை உடனே அந்த மத்யசாலையினுள்ளே புகுந்து நாலு முந்தை மத்யபானம் அழகாகப் பண்ணி வருத்தம் தீர்ந்தார் என்ற கதையாகவன்றோ குடுக்கையின் எழுத்துள்ளது. பெரியபெருமாள் திருமுகமண்டலத்தை தேசிகன் குணுங்கு நாற்றமுடையதாக ஸாதித்தாரேயன்றி மொச்ச நாற்றமுடையதாக ஸாதிக்கவில்லையே என்கிற ஆக்ஷேபத்தை இந்தக் குடுக்கை ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதியிலே பண்ணித் தெளியட்டும் மாட்டாயிருந்தால் இனிவாயைக்கையைத் திறவாது தேசிகனையேயன்றோ அதிவாதியென்கிறது இக்குடுக்கை.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆசார்யஸூக்திகளை தூஷிக்கப் பிறந்த இந்த கோமாயுவுக்காகநாம் ஆருயிரப் படிக்குக் குறைகூறவந்தோமல்லோம். ராவணன் பிராட்டியை அசோகவனத்தில் கொண்டுவைத்தானென்று வானர முதலிகள் மந்தோதரியைக் கிஷ்கிந்தையில் கொண்டுவைத்திலர்.

Released by Maran's Dog ,Toronto, Canada

"ஸ்வாமி வேதாந்த தேசிகனின் தனிப்பெருமை" என்று மகுடமிட்டு அந்த தேசிகனுக்கு ஜீவாதுக்களான ஆசாரியர்களை தூஷிப்பதே தேசிகவைபவ கீர்த்தனமென்றுகொண்ட இக்குடுக்கையின் சுவையற்ற கட்டுரையை இன்னமும் பரிசீலிக்கவேணுமோ? "காடிக்குப் பிடித்தவிடமெல்லாம் மயிர்" என்னுமாபோலே தொட்டதொட்டவிடமெல்லாம் ஆசார்யநிந்தையே "ஒரு அதிவாதி நம்மாழ்வாரையும் எம்பெருமானையும் ஒப்பிட்டுப் பேசும் வியாஜத்தில் எம்பெருமானுடைய திருமுகமண்டலம் இடைச்சி தயிர் வெண்ணெயின் மொச்சை நாற்றமுள்ளது என்று கூறினார். இதை சகிக்காத ஸ்வாமி..." என்று இந்தக்குடுக்கை எழுதினதெல்லாம் என்னுயிற்றென்பதை ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளமறியும்.

Released by Maran's Dog ,Toronto, Canada

ரஸிகாக்ரேஸரர்களான ஆசாரியர்களின் அநுபவஸாம்ராஜ்யத்திற்கு எவ்வளவோ தூரத்தில் நிற்கவேண்டுமே இந்த அரஸிகக்குடுக்கை. நித்யஸ்மரணீயரான தேரழுந்தூராண்டவன் ஒருநாள் ஸ்ரீஹஸ்திகிரியிலே *வக்ஷஸ்ஸ்தல்யாம் துலஸிகமலா கௌஸ்துபைர் வைஜயந்தீ ஸர்வேசத்வம் கதயதிதராம் ரங்கதாம்நஸ் ததாஸ்தாம், கூர்மவ்யாக்ரீநகபரிமிலத் பஞ்சஹேதி யசோதாநத்தா மௌக்த்யாபரணமதிகம் நஸ் ஸமாதிம் திநோதி* என்கிற (ஸ்ரீரங்கராஜஸ்தவே) பட்டர் ஸ்ரீஸூக்தியை யநுஸந்தித்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத் தொழிந்தபடியை அஸக்ருத் ஸ்மரித்து ஈரியாயிருக்குமடியேனுக்கு இன்று இந்தக் குடுக்கையின் அரஸிகப்பேச்சைக்காண நேர்ந்தமைக்கு வருந்த மாளவில்லையே. பகவத்த்யாந ஸோபாநத்தில் ஸ்வாமி *குப்யச்சோளீவசந குடிலை: குந்தலை: என்றருளிச் செய்ததை ஒரு ஸமயம் இந்தக்குடுக்கை எடுத்துக்கொண்டு இகழ்ந்து பேசினவற்றை கீர்த்திமூர்த்தியான நாவல்பாக்கம் ஸ்வாமி பலகால சொல்லிப் பரிதபித்தார். "ஆத்யக்த ரஹிதம் வந்தே மத்வஸ்த்ர ஸத்ருசம் ஹரிம்" என்றது ஹாஸ்யமாயிருந்தாலும் ஸாத்ருச்யம் பொருந்துகிறது; சோளீவசநங்களின் கௌடில்யத்திற்கும் ஸ்ரீரங்கநாதகுந்தலங்களின் கௌடில்யத்திற்கும் என்ன ஸாம்யம்? என்ன பொருத்தம்? என்று குதித்ததாம் இந்தக் குடுக்கை *யோக்ஷித்பூதத்ருஷந்தி *ஸிலாதேஸ் ஸ்த்ரீத்வம் தி *த்ருஷத்தா துர்ஜாத ப்ரசமநபதாம் போஜராஜஸே* இத்யாதி தேசிகஸூக்திகளை 'இதெல்லாம் பேத்தல்' என்ற பேர்வழியன்றோ இது. *பசுமாரணகர்மதாகுணப் பேர்வழிக்கு இந்த அதிகப்ரஸங்கமெல்லாம் எதுக்கு? என்கிறார் ஞானப்பிரான்.

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

"அஸ்தாநபய சங்கித்வம்" என்று ஒரு ப்ரஸங்கமெடுத்துக் கொண்டு காடுபாய்ந்து எழுதும் விஷயங்களும், "ஸ்ரீமத்ராமாயணத்திற்கு வியாக்கியானம் செய்யும்முறை மிகவும் போற்றத்தக்கது ஆனாலும் சில கற்பனைகள் எல்லையும் கடந்து விடுவதைப் பார்க்கிறோம் இதைமறுக்கும் வகையில் தேசிகன் அர்த்த பஞ்சகாதிகாரத்தில விளக்கியிருப்பது மிகவும் அழகானது" இத்யாதிகளும் "த்வாதசியன்று ஸூர்யக்ரஹணம் நேர்ந்தால் பாரணை முந்தியா? தர்ப்பணம் முந்தியாஎன்கிறவிசாரம் ஸ்ரீபாஷ்யத்தில்ஐந்தாமத்யாயத்தில் ககநாரவிந்தாதி கரணத்தில்செய்யப்பட்டு, இரண்டும் ஸமகாலத்தில் செய்யவேண்டுமென்று முடிக்கப்பட்டது, என்றதோடொக்கும். "ஸ்ரீமத்ராமாயணத்தில் குஹனும் சபரியும் ஏற்றத்தாழ்வின்றி மங்கலகரமாக மதிக்கக்கூடிய வார்த்தைகளாலேயங்கி, யாதானு மோசாக்கையில்புக்கு ஓடோடி நாடு மூரும் திரிந்து வெளிப்பட்டால் அதுவே காரணமாக கங்கையில் ஓடங்களைக்கண்டு நாய்களும் நரிகளும் அஞ்சி விழுந்து ஒளித்து எதையும் செய்ய முடியாமல் திகைத்து, பனங்காட்டில் நரிகளுக்குப் படையெடுக்காமையாலே ஆந்தனையுங்கைகாட்டினுல் வியாக்கியானம் ஸேவிக்கும்போது மறந்து போனாலும் பாதகமில்லை யென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது — இத்தகைய உதாரகம்பீரமதுரமஸ்ருண மாங்ய மஹிதோக்திகளையெழுதுவதில் குடுக்கைக்கு நிகரற்ற நைபுண்யமுண்டு ... ... ✱

இவ்வளவோடு இன்று பாதுகா ப்ரேக்ஷணத்தை முடித்து, மேல் மணவாள மாமுனிகள் திவ்ய குணாநுபவத்தாலே வாக்குத்தூய்மை பெறுவோமாக.

மணவாளமாமுனிகளின் பரமப்ராமாணிகத்வம்

நம்முடைய பூர்வாசார்ய பரம்பரையானது மணவாளமாமுனிகளோடு முடிவு பெற்றிருக்கின்றது. மாமுனிகளுக்கு முன்னே க்ரந்தங்களருளிச்செய்த ஆசாரியர்கள் பலருளர் அவர்களில் ஒருவர்க்குமில்லாத ஏற்றம் மாமுனிகளுக்கு அஸாதாரணமாகவொன்றுண்டு அதாவது பரமப்ராமாணிகத்வ பரமகாஷ்டை, இதனால் மற்ற ஆசாரியர்கள் அப்ராமாணிகர்களா? என்று ஸஹஸா கேட்டுவிடலாகாது. ப்ராமாணிகத்வ ப்ரகாரங்கள் பலவாறுண்டு; ப்ரமாணகதிக்கு அவிரோதமாக சொல்லுமவர்கள் எழுதுமவர்கள் ப்ராமாணிகர்கள் என்பது யாவருமறிந்தது. அபூர்வமான சில அர்த்தவிசேஷங்களைத் தமக்கு முன்னே சில மஹான்கள் அருளிச்செய்திருந்தால் அவ்வர்த்தவிசேஷங்களை [ப்பிற்பட்டவர்களான] தாங்கள் எழுதநேரும்போது "இவ்வர்த்தத்தை ஏற்கனவே இன்னார் அருளிச்செய்திருக்கிறார்" என்று காட்டவேண்டியது முறை; அப்படி காட்டாமற் போனாலும் அப்ராமாணிகத்வம் வந்துவிடாது. எழுதின அர்த்தங்கள் ப்ராமாணிகமாயிருந்தால் போதுமானது. முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசாமல் தம் நெஞ்சில் தோற்றினதே சொல்லுமவர்களும், அப்படிச் சொல்லுவதோடு நில்லாமல் [இது சுத்தவுபதேச வரவாற்றது] இதுதான் சுத்த ஸம்ப்ரதாய பரம்பரயா வந்த அர்த்தம் என்று சொல்லி வஞ்சிப்பவர்களும் அப்ராமாணிகர்களேயொழிய, ப்ராமாணிகார்த்தங்களை யெழுதி அவற்றுக்கு ஆகரம் காட்டாமற் போனாலும் ப்ராமாணிகத்வத்திற்குக் கொத்தையில்லை மற்றுள்ள ஆசார்யர்களைப்பற்றின வரையில் இது நிரவத்யமான வார்த்தையேயாகும். "மணவாளமாமுனிகளின் பரமப்ராமணிகத்வ பரமகாஷ்டை" என்று முன்னம் அடியேன் நிர்தேசித்திருப்பதால் மணவாளமாமுனிகளைப் பற்றிமட்டும் தனிப்படவே பேசவேண்டும். மாமுனிகள் வியாக்கியானங்களிலே, தாமாகப் பலபல அபூர்வ விஷயங்களையருளிச்செய்கிறார் அவற்றைப்பற்றி விசாரமில்லை. ஏற்கனவே பூருவர்கள் அருளிச்செய்த விஷயங்களையும் ஸ்வாமி தாம் கையாளுகிறார். இதற்குப் பலவிடங்கள் காட்டலாம். ஏற்கனவே அடியேன் சேகரித்து வெளியிட்டுள்ள மாமுனிவன் மேற்கோள் விளக்கு என்னும் நூலில் இது விசதமாகவுணரலாகும். அப்படி பரகீயக்ரந்தங்களிலிருந்து அர்த்தவிசேஷங்களை யெடுத்துக் காட்டுமிடங்களில் 'இன்னவிடத்திலே இன்னார் இங்ஙனே யருளிச்செய்தார்'' என்று மாமுனிகள் காட்டியருளாதிருப்பது ஓரிடமும் கிடையாது மாமுனிகளின் திவ்யஸூக்திகளை மாச்சரியத்தினால் அநுபவிக்கப் பெறாதவர்கள் கிடக்கட்டும். அப்ரமேய பாக்யவசத்தாலே அவற்றை யநுபவிக்கப் பிறந்தவர்களுங் கூட

acharya.org

ஆழ்ந்துநோக்கி இத்தகைய பெருமைகளை உணரப் பெறுதார் பலருளர் என்பது அடியேனுடைய அனுபவத்தில் கண்டவிஷயம்.

ப்ரக்ருதம் ஒரே விஷயம் ஸ்தாலீபுலாகந்யாயேந காட்டுகிறேன் ஸ்ரீவசந பூஷணத்தில் (96) "ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்" என்பதொரு சூர்ணிகை இவ்விடத்தில் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் "சமமாவது அந்த:கரண நியமநம்; தமமாவது பாஹ்யகரண நியமநம்" என்றருளிச் செய்து இதற்கு ப்ரமாணங் காட்டியருளத் திருவுள்ளம்பற்றி "*சமச் சித்தப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச் சேந்த்ரிய நிக்ரஹ:* என்னக்கடவதிறே" என்று ஒரு ப்ரமாணம் காட்டி, உடனே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியையும் காட்டவேண்டி "*க்ஷமா ஸத்யம் தமச் சம:* என்றவிடத்தில் 'தமோ பாஹ்ய கரணாநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம:- அந்த:கரணஸ்ய ததா நியமநம்' என்றிறே பாஷ்யகாரருமருளிச் செய்தது." என்று கீதாபாஷ்ய ஸூக்தியை யெடுத்துக் காட்டியருளினர். இவ்வளவோடு நில்லாமல் அடுத்தபடியாக "மாறிச் சொல்லு மிடமுமுண்டு" என்றருளிச் செய்தார். அதன் கருத்து என்னவென்றால், பாஹ்யகரணாநாம் நியமநம் தம:. அந்த:கரணநியமநம் சம: என்று இப்படியே கொள்ளவேணு மென்கிற நிர்பந்தமில்லை; அந்த:கரண நியமநம் தம, பாஹ்ய கரண நியமநம் சம: என்று கொள்ளுவதுமுண்டு என்பதாம். கீழே இரண்டு ப்ரமாணங்களைத் தாமே யெடுத்துக் காட்டிவிட்டு அவற்றோடு ஸம்பந்தப்படாதபடி "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று அருளிச் செய்வது மணவாள மாமுனிகளின் இயல்புக்குச் சேராது; அப்படியிருக்க எங்ஙனே அருளிச்செய்தாரென்று விமர்சிக்க ப்ராப்தம். மேலேகாட்டின ஸ்ரீஸூக்தியில் "மாறிச் சொல்லுவதுமுண்டு" என்னுமல் "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று ஸாதித்திருக்கையாலும், அதுதானும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை உதாஹரித்தவுடனே ஸாதித்திருக்கையாலும் பாஷ்யகாரரான ஸ்வாமியே மற்றோரிடத்தில் மாறிச் சொல்லியிருக்கிறாரென்று தெரிவிக்கப்பட்டதாகிறது. அப்படி ஓரிடத்தைத் தாம் காணுமல் அந்த ஸ்ரீஸூக்தியை ஒருகாலும் அருளிச் செய்யமாட்டார் மாமுனிகளென்பது ஸத்யம். இதுபற்றியே யன்றோ "பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி" என்று உலகமெல்லாம் வாழ்த்திப் போருவது.

கேண்மின்; அந்த கீதாபாஷ்யத்திலேயே ஸ்வாமி தாமே மாறிச் சொல்லியுள்ளார். (அதாவது)—பதினாறுமத்யாயத்தில் முதல் சுலோகத்தில் "தாநம் தமச் ச யஜ்ஞச் ச" என்றும், இரண்டாம் சுலோகத்தில் "த்யாகச் சாந்தி: அபை

acharya.org

சுகம்" என்றுர் வருகிறது அங்கும் தம சமங்களுக்கு விவரணமுள்ளது. கீழே காட்டின விவரணம் பத்தாமத்யாயத்தில் நான்காவது ச்லோகத்தின் பாஷ்யத்திலுள்ளது. (16—1, 2ல்) காணும் விவரணம் அதனில் வேறுபட்டது அந்த:கரண நியமனத்தை தமமாகவும். பாஹ்ய கரண நியமனத்தை சமமாகவும் இங்கு பாஷ்யகாரர் அருளிச் செய்துள்ளார். அவரும் ஸ்வோக்தி விருத்தமாக வருளிச் செய்பவரல்லர் இரண்டு படியையும் அவர் ப்ரமாணஸித்தமாகக் கண்டவராகையாலே ஒரு படியை ஓரிடத்திலும் மற்றொரு படியை மற்றோரிடத்திலும் அருளிச் செய்தார். மணவாளமாமுனிகள் அவருடைய புநரவதாரபூதராதலால் இரண்டு படியும் தமக்கு ஹ்ருத்கதமாகையாலே "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்றருளிச் செய்தார்.

ஸ்வாமி தேசிகனருளிச் செய்த தாத்பர்ய சந்த்ரிகையில் மேலே யெடுத்துக் காட்டிய பதினாறுமத்யாய ஸ்தலத்தில்—"ஏதேந கேஷாஞ்சித் அநயோச் சப்தயோர் வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யாநம் நிரஸ்தம்" என்கிற பங்க்தி காணப்படுகிறது. மணவாளமாமுனிகள் தேசிகனுடைய காலத்திற்குப் பிற்பட்டவராகையாலே மாமுனிகளின் ஸ்ரீஸூக்திக்கு மறுப்பாக அது அருளிச் செய்ததென்று கொள்வதற்கு அவகாசமேயில்லை வேறு யாருடைய உக்திக்கு மறுப்பென்று விமர்சிக்குமளவில் சங்கரபாஷ்யத்திற்கு மறுப்பென்று ஸ்பஷ்டமாக விளங்காநின்றது. ஆனால் பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திக்கே மறுப்பாகத் தேறுவதால் இந்த பங்க்தி ப்ரக்ஷிப்தமாயிருக்குமாபென்று தோன்றுகிறது வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யானம் பண்ணியருளினவர் பாஷ்யகாரருமாதலால் அவருடைய வியாக்யானத்தை நிரஸ்தமென்று ஸ்வாமி தேசிகன் நெஞ்சாலும் நினையாராகையாலே. ஆனால் தேசிக பக்தம் மன்யர்கள் ப்ரக்ஷிப்தமன்று என்றும் இப்படி தேசிகனுடைய திருவுள்ளமென்றும் கூறுகிருர்கள். இங்கு நமக்கு தத்வஜிஜ்ஞாஸயுள்ளது. இங்கு தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீஸூக்தி விஷயம் ப்ராஸங்கிகமாக ப்ரஸ்தாவிக்க நேர்ந்தது பத்தாவது அத்யாயத்தில் பாஷ்ய ஸ்ரீஸூக்தியிருக்கும்படியையும். அங்கு சந்த்ரிகையில் தாம் விசேஷித்து அருளிச் செய்தபடியையும் மறக்க வல்லவரன்றோ தேசிகன். சமம் தமம் என்று இரண்டு பதம் வேண்டியதில்லை; அந்தர பதமிருந்தாலும் அதற்கே பாஹ்ய ஆந்தரகரண நியமனத்தைப் பொருளாகக் கொள்ளமுடியும். ஆனாலும் தனித் தனி இரண்டு பதங்களிருப்பது வினைகாதபடிக்கு அர்த்த பேதம் காட்டுவது யுக்தம் என்று திருவுள்ளம் பற்றி " .. பௌநருக்த்ய பரிஹாராய விஷய பேதே வக்தவ்யே நியமந க்ரமேண தமசமயோ: பாஹ்யாந்தர கரண விஷயத்வோக்தி." என்று சந்த்ரிகையில் ஸாதித்திருப்பதனால் இதற்குச் சோதபடியன்றோ பதினாறுமத்யாயத்தில் சந்த்ரிகை அவதரித்துள்ளது. அன்றியும்

acharya.org

"ஏதேந. கேஷாஞ்சித் வ்யாக்யாநம் நிரஸ்தம்" என்கிற பங்க்தியும் சிறிது பராமர்சிக்கத் தக்கது ஏதேந என்பதற்கு 'பாஷ்யகாரர் இப்படி யருளிச் செய்திருக்கையாலே' என்றுதானே பொருளாகும். நம்முடைய பாஷ்யகாரர் ஸாதித்ததனாலே சங்கரபாஷ்யம் எப்படி நிரஸ்தமாகும் இது மஹா ப்ராஜ்ஞர்கள் விமர்சிக்க வேண்டிய விஷயமென்று விட்டு விடுகிறேன்.

இந்த வியாஸத்திற்கு விஷயம் மணவாளமாமுனிகளின் பரம ப்ராமாணிகத்வ நிரூபணமே யாதலால் அதனைச் செவ்வனே செய்து களிப்பது மட்டுமே இங்கு அடியேனுக்கு உத்திஷ்டம் ... ■

— சில அநுபவங்கள் —

உன்னுமவர்க்குள்ளமுருகும்

திருவாய்மொழி நூற்றந்தாதியில் இன்னுயிர்ச்சேவலும் என்ற திருவாய்மொழிப் பதிகத்திற்கு ஸாரார்த்த ஸங்க்ரஹமாக இட்டருளின "இன்னுயிர் மால் தோற்றினது" என்கிற பாசுரத்தின் ஈற்றடி உன்னுமவர்க்குள்ளமுருகும் என்றது; வெண்பாவின் ஈற்றடியெல்லாம் முச்சீர் கொண்டது என்பது உலகமறிந்தது இவ்வீற்றடியைச் சீர் பிரிக்கும்போது உன்னுமவர்க் குள்ள-முருகும் என்று முச்சீராகப் பிரிப்பர் பலர். இங்ஙனே பிரிப்பதில் வெண்டளை பிறழாமலிருந்தாலும் ஈற்றுச்சீர் இலக்கண விதிக்கு ஒவ்வாது. ஏனெனில், ஈற்றுச்சீரின் வாய்பாடு நாள், மலர், காசு, பிறப்பு என்பதாம். ஈற்றுச்சீரை ஈரசைச் சீராகக் கொண்டால் உகர வீற்றதாகவே இருக்கவேண்டும். 'உருகும்' என்றிருக்கத்தகாது. உருகு என்றிருக்கலாம். அது பொருட்குப் பொருந்தாது. ஆகவே இடைச்சீரை உள்ளமுரு என்று கூவிளங்காய்ச் சீராகப் பிரித்துக்கொண்டு (கும்) என்னுமெழுத்தை 'நாள்' என்னும் வாய்பாட்டுக்குறுப்பாகக் கடைச்சீராகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இப்படியே அந்த நூற்றந்தாதி தன்னிலேயே எங்காதலுக்கடி என்கிற பாசுரத்தின் ஈற்றடி "உள்ளொளிந்தத் திங்கை யறுக்கும்" என்பதாம். அதிலும் 'அறுக்கும்' என்பதைக் கடைச் சீராகப் பிரிக்கலாகாது. (கும்) என்பதையே கடைச்சீராகக் கொள்ளவேண்டும். இதுதான் இலக்கணவழிக்குப் பொருந்தும் "குன்றிவிடுமே பவக்கங் குல்" "பாடலைவார்க் குண்டாமின் பம்" "தன்புற்றுன் மாறனந் தோ" "வன்மையடைந்தான் கேச வன்" என்றிவை முதலான அடிகளில் (கும்) (பம்) (தோ) (வன்) என்னுமிவை கடைச்சீராக வருதல் காண்க.

acharya.org

ஊற்றின் கண் நுண்மணல்போல் உருகாநிற்பர் நீராயே

'திருவாய்மொழியில் "பொன்னுலகாளீரோ" என்கிற பதிகத்திற்குப் பயனுரைக்கும் பாசுரமான "மாற்றங்களாய்ந்து கொண்டு" என்கிற பாசுரத்தின் ஈற்றடியிது. இப்பதிகம் கற்றார்க்குப் பயனுரைப்பதாமிது. ஒவ்வொரு பதிகத்திற்கும் முடிவில் பயனுரைத்தருளா நின்ற ஆழ்வார் 'பெறலாகும் வானோங்கு பெருவ்ளமே' என்றும் 'ஏதமிலாயிரத்திப்பத்தை ஓதவல்லார் பிறவாரே' என்றும் "கற்பரேல் கல்வி வாயுமே' என்றும் பெறக்கூடிய அபூர்வமானதொரு பலத்தை அருளிச்செய்து வருவதை காணா நின்றோம். இங்கு அப்படியன்றிக்கே. இவையுமொரு பத்தும் வல்லார் நீராயுருகா நிற்பர் என்பது பலனாகுமோ? அபூர்வ வஸ்து லாபமேயன்றோ பலனாகச் சொல்லக் கூடியது? இங்கு அபூர்வ வஸ்து லாபம் ஒன்றுமில்லையே. இது எப்படிப் பலனாகும் என்று சிலர் சங்கிப்பதுண்டு. கேண்மின். இதுதான் அபூர்வமான பலன் என்று உணர வேண்டும். அருளிச் செயலை ஓதுமவர்கள் சுஷ்கஹ்ருதயரன்றிக்கே இளகின நெஞ்சையுடையராய் நீராய் உருகி நிற்பரென்பது பலன்கள் எல்லாவற்றிலும் மேம்பட்ட பலனாகும். இப்பேறு வரப்ரஸாதமடியாகக் கிடைக்கக் கூடியதென்பது ஆழ்வார் திருவுள்ளமென்க. ... ... ✕

எற்றைக்குமேழேழ் பிறவிக்கும்

ஆழ்வார்களெல்லாரும் பெரும்பாலும் பகவான் பக்கலிலே வேண்டினது பிறப்பறுக்கவேணுமென்று "இனிப்பிறவியான் வேண்டேன்" என்றும் "ஆகலால் பிறவி வேண்டேன்" என்று மிப்புடைகளிலே யன்றோ ஆழ்வார்களின் பாசுரம் அப்படியிருக்க ஆண்டாள் ஒருத்தி மட்டும் பிறவியை வெறுக்காததோடு மேன்மேலும் பிறந்து கொண்டேயிருக்கவேணுமென்கிற ஆசையை வெளியிடுவதாக காட்டுமிந்தப் பாசுரத்தின் கருத்து ஆராயப்படவேண்டும் ஆராயுமளவில் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் எம்பெருமானுடைய அவதாரம் தோறும் பிராட்டியும் அவதரித்தே வருகின்றாளென்பதைக் காட்டும் சுலோகங்கள் நினைவுக்கு வரும் (அதாவது) "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே சமாநுஷீ விஷ்ணோர்தேஹாநுரூபாம்வை கரோத்யேஷா ஆத்மநஸ்தநூம் ராகவத்வே அபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி. அந்யேஷு சாவதாரேஷு ... " இத்யாதி சுலோகங்களினால் எம்பெருமானுடைய அவதாரங்கள் தோறும் பிராட்டியும் கூடவே அவதரிப்பது தெரிவிக்கப் படுகிறது. அவ்வண்ணமாகவே ஆண்டாள் தானும் தேவதேவ திவ்யமஹிஷியாய்க்கொண்டு அவதரிப்பவள் என்பது ஸூசிப்பிக்கப் படுகிறது இங்கு "எற்றைக்குமென்றது தோன்றப் பிறந்து" இத்யாதியான ஆசார்யஹ்ருதய சூர்ணையை வ்யாக்கியானத்தோடு அநுஸந்திப்பது. ... ... ✕

acharya.org

ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் விஜ்ஞாபித்த

தேசிகஸூக்தி தத்வஜிஜ்ஞாஸா

— முன்னுரை —

அடியேன் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நம்முடைய பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையெல்லாம அவ்வவற்றுக்குத் தக்கபடி தேவநாகர லிபியிலும் தமிழ்லிபியிலும் தெலுங்குலிபியிலும் அச்சிடத்தொடங்கி, பகவத்ராமாநுஜக்ரந்தமாலையையும் ஸ்ரீமத்வரவரமுநீந்த்ரக்ரந்தமாலையையும் ஸ்ரீமத் வேதாந்த தேசிகக்ரந்தமாலையையும் ஸதாசார்யஸூக்திமாலையையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேனென்பதை உலகமறியும். இதெல்லாம் முடிவுபெற்று முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாய்விட்டது. ஸ்ரீமத் வேதாந்த தேசிகக்ரந்தமாலை அச்சிட்ட போது அந்த க்ரந்தங்களை அச்சுத்தாள் திருத்தும் வகையில் (Proof பார்க்கும் முறையில்) அஸக்ருத் ஸேவிக்க நேர்ந்தபடியாலும், அதற்கு முன்பும் ஸேவித்திருந்தபடியாலும் அவற்றில் சில ஜிஜ்ஞாஸைகள் தோன்றின. அவற்றை ஆப்தர்களான ஸஹ்ருந்மணிகளிடம் விஜ்ஞாபித்தும் த்ருப்திகரமான பரிஹாரம் பெறுமையாலே பத்ரிகைகள் மூலமாகவும் தனிப் புத்தகங்கள் மூலமாகவும் அந்தஜிஜ்ஞாஸைகளைப் பிரசுரம் செய்ய நேர்ந்தது; அவற்றை ஜிஜ்ஞாஸையாகக் கொள்ளாமல் தேசிக திவ்யஸூக்தி தூஷண மென்றுகொண்டு (Late) D. T. தாதாசாரியர், புத்தங்கோட்டம், சேட்லூர் ஸ்வாமிகள், வர்த்தமாநர்களான ஸ்ரீ உ. வே. உத்தமூர்ஸ்வாமி, மதுராந்தகம் ஸ்வாமி போல்வார் மற்றுஞ்சிலரும் மறுப்புகள் எழுதி வெளியிட்டார்கள். அவ்வவற்றின் மேல் அடியேன் மறுப்புகள் பலபல வெளியிட நேர்ந்தது. ஆகவிப்படி வாதப்ரதிவாதமுறை வளர்ந்துவிட்டதேயொழிய அடியேனுக்கு ஜிஜ்ஞாஸாசாந்தி ஈஷத்துமுண்டாகாததோடு, அடியேனுக்கு தேசிகத்வேஷி, தேசிகஸூக்தி தூஷகன் என்கிற அபவாதங்களும் தோன்றிவிட்டன.

acharya.org

தேசிகஸூக்திகளை தூஷிக்கவோ பூஷிக்கவோ அடியேன் எவ்வளவிலேன். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் அருளிச்செய்த வொரு ச்லோகம் கேளீர்; ''யதி மே ஸஹஸ்ரவதநாதிவைபவம் நிஜமர்ப்பயேத் ஸகில ரங்கசந்த்ரமா:, அத சேஷவந் மம ச தத்வதேவ வா ஸ்துதிசக்த்யபாவவிபவேபி பாகிதா." என்பதாம்; இதன் பொருள் வ்யக்தம். அதேபோல், தேசிக ஸூக்திகளை பூஷிக்கவோ தூஷிக்கவோ ஒரு விலக்ஷணயோக்யதையுண்டாகவேணுமல்லவா?

இடையில் ஒரு சிறிய விருத்தாந்தம் விஜ்ஞாபிக்கிறேன். அடியேன் தேசிகக்ரந்தபாலை அச்சிட்டபோது அதற்காக ஏறக்குறைய ஒரு லக்ஷம் ரூபாய் செலவாயிற்று. அவ்வளவு தொகையை நான் சொந்தமாகச் செலவு செய்ய அதிகாரியோ? பல உதாரர்களின் உதவியை வேண்டிப் பெற்றே அதை நிறைவேற்றினேன். (கீர்த்தி மூர்த்தியான) ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி இஞ்சிமேட்டழகிய சிங்கர் அப்போது திருவரங்கம் பெரிய கோயிலில் (மடாதிபதியாக அல்லாமல்) இளவரசாக எழுந்தருளியிருந்தபடி. அடியேன் (க்ரந்தமாலா முத்ர ணார்த்தம்) யாசகனாக அங்கு விடைகொண்டிருந்தபடியாலே பூர்வாச்ரம பரிசயபாஹுள்யத்தாலே இஞ்சிமேட்டழகிய சிங்கரையணுகி லிப்ஸையை விஜ்ஞாபித்தேன். அப்போது அழகியசிங்கர் உண்மை யாக ஸாதிக்கவேண்டிய விஷயங்களை [தம்முடைய பாரதந்திரியத்தை] ஸாதித்துவிட்டு, உடனே அடியேனைப் பெரியஸ்வாமியிடம் அழைத்துக் கொண்டுபோய் அந்த ஸ்வாமியிடம் அருளிச்செய்த வார்த்தைகள்- ''காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் அண்ணா என்கிற இவர் ஸ்வாமிக்கும் தெரிந்தவரே; அடியேனுக்கு நெடுநாளாகப் பரிசிதர்; பரிசயமென்பது ஸாமாந்ய வார்த்தை, இலங்கையில் பிராட்டி திருவடியை நோக்கி *வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:?! என்று கேட்க, ''ராமஸுக்ரீவயோ ரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத? என்று திருவடி விடை கூறினாப்போலே எம் இருவர்க்கும் ஐக்கியமென்றே சொல்ல வேணும். இப்போது இவர் தேசிக திவ்யஸூக்திகளையெல்லாம் ஒரு மாலையாக அச்சிட்டுவருகிறார்; ஸ்ரீ பரகாலஸ்வாமியின் அபிமானத்தை விசேஷமாகப் பெற்றிருக்கிறார் இங்கு ஸ்வாமி ஸன்னிதியில் யதோசிதம் உபகாரம் பெற விரும்பி வந்திருக்கிறார்.'' இத்யாதிகள் ஸாதித்தார். பெரியஸ்வாமி [காருகுரிச்சிஸ்வாமி] இதையெல்லாம் கேட்டருளித் திருவுள்ள முகந்து ஸாதித்தருளின பல ஸூக்திகளினி

acharya.org

டையே "தேசிக ஸூக்திகளில் இவர்க்கு விப்ரதிபத்தியிருப்பதாகக் காதில் விழுந்திருக்கிறது; அதைப்பற்றி இங்கே எப்படி அபிப்ராயம்?" என்று இஞ்சிமேட்டு ஸ்வாமியை வினவ, அந்த ஸ்வாமி ஸாதித்தருளினபடி; அந்த ப்ரவாதம் உண்டுதான். *அஹம் வேத்மி மஹாத்மாநம்* என்கிற முறையில் அடியேன் விஜ்ஞாபிக்கிறேன். காஞ்சீபுரியில் சாமாதி நமலே தாதாசாரியர் என்பவர் அப்ரஸக்தமாகச் சில தென்னாசார்ய தூஷணக்ரந்தங்களை [ஸதாசார்யப்படியென்றும் வசனபூஷணசசீர் வகுப்புஎன்றும் இத்யாதிகளை] வெளியிட்டார் அவற்றுக்கு இவர் கண்டனங்கள் எழுதி வெளியிட ஆரம்பித்தார். அதிலிருந்து வாத விவாதங்கள் வளரத்தொடங்கிற்று. தேசிக ஸூக்திகளில் இவர் சில ஆக்ஷேபங்கள் செய்திருப்பதுண்டு. உண்மையில் ஜிஜ்ஞாஸாரூபங்களே அவை; அடியேனுக்கும் இவர்க்கும் ஸந்நிகர்ஷம் அதிகமாகவுண்டாகையாலே அடியேனிடத்திலும் பல ஜிஜ்ஞாஸைகளை விஜ்ஞாபித்திருக்கிறார்; (1) ஸ்ரீமத்ராமாயணத்தில் *மஹாதேவதைவதம் ஜ்யம் ஜஹாவ ஜ்வலிதேநலே* என்றுள்ள ச்லோகத்தை ஸச்சரித்ர ரக்ஷையில் ப்ரஸ்தாவித்து அங்கே நிகமித்தபடிக்கு மாறாக பாதுகாஸஹஸ்ரத்தில் "நமதி மஹதி தேவே" என்று ஸாதித்தது எங்ஙனே பொருந்தும்? கீதாபாஷ்யதாத்பர்ய சந்திரிகையில் சமதம சப்தார்த்தநிரூபணத்தில் பாஷ்ய விரோதம் தோன்றுகிறதே, எப்படி பரிஹாரம்? என்று பல கேட்டிருக்கிறார். த்வயத்தில் பூர்வகண்டத்தில் ஸ்ரீமச்சப்தத்தில் உபலக்ஷணத்வம் பிராட்டிக்குச் சிலர் சொல்லுவதாக ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்திருக்குமிடத்தில் சிலபல கேள்விகள் என்னிடமும் கேட்டிருக்கிறார் இவர். *மத்யோபஹதபாத்ரஸ்த தீர்த்தத்ருஷ்டாந்த வர்ணநம்* இத்யாதி தேசிக காரிகையிலும் திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச் செயலில் அவத்யம் கூறப்பட்டிருப்பது எப்படி பொருந்தும்? என்றும் என்னைக் கேட்டிருக்கிறார். இப்படிபட்ட கேள்விகளுக்கு விமர்சித்து ஸமாதானங்கள் சொல்லவேணுமேயொழிய "தேசிகனை தூஷிக்கிறார், தேசிக ஸூக்திகளைக் கண்டிக்கிறார்" என்று சொல்லி விடுவது நியாயமன்று என்பது அடியேனுடைய அபிஸந்தி; வாதப்ரதிவாதங்கள் என்று நேர்ந்துவிட்டால் ஏதேதோ எழுத நேர்ந்துவிடுகிறது. இது ஸர்வஜநீநந்தானே. இவருடைய க்ருஹத்தில் தேசிக திவ்யமங்கள விக்ரஹம் ஆராதிக்கப்பட்டு வருகிறது; அது உண்மையான பக்தியோடல்ல என்று சொல்லி விட்டாலும் *மித்ரபாவேந ஸம்ப்ராப்தமென்கிற கணக்கிலே அது இவருடைய ச்ரேயஸ்

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada
ஸுக்களுக்கெல்லாம் நிதாநமென்றே அடியேன் கருதுகின்றேன்– என்று ஒருமணி காலம் அமுத வெள்ளமாகப்பொழிந்தாயிற்று. பிறகு பெரியஸ்வாமி திருவுள்ளமுகந்து ஸ்ரீதேசிகஸூக்திமுத்ரண கைங்கர்யத்திற்கென்று இரண்டாயிரம் ரூபா அநுக்ரஹித்தாயிற்று.

இதைக் காண்பவர்கள் – "ரூபாய் இரண்டாயிரமென்ன? நாலாயிரமும் எண்ணாயிரமும் பெற்றிருக்கக் கூடும்; அதில் ஸந்தேஹமில்லை; இஞ்சிமேட்டழகிய சிங்கர் ஸாதித்ததாக உதாஹரித்தவார்த்தைகள் எல்லாம் விச்வஸநீயமாகத் தோன்றவில்லை" என்னக்கூடும். கற்பனையாக நாம் ஓரக்ஷரமும் எழுதமாட்டோம். இஞ்சிமேட்டழகியசிங்கர் அருளிச் செய்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார வியாக்கியானம் ஏகாந்தமாக இல்லை. அச்சாகிப் பலரிடமுள்ளது. அதிலிருந்தே ஸாக்ஷியம் காட்டுகிறேன்மேலே; பலகால் காட்டியுமிருக்கிறேன். அது நிற்க.

Released by Maran's Dog ,Toronto, Canada

இஞ்சிமேட்டழகியசிங்கர் பெரியஸ்வாமியிடம் உரையாடும்போது "இவருடையக்ருஹத்தில் தேசிகன் திருக்கோலம் ஆராதிக்கப் பட்டுவருகிறது" என்றருளிச் செய்ததை ஸ்ரீமத்பரஹம்ஸ, வர்த்தமாந (முக்கூர், ஸ்ரீமதழகியசிங்கர் கேட்டருளியிருந்தபடியாலே, அதைப் பரீக்ஷிப்பதற்காக (ச்சிலவாண்டுகட்கு முன்பு) திடீரென்று ஒருநாள் பகல்பன்னிரண்டு மணிக்குமேல் ஸ்வகீயவாஹனத்தில் முக்கூரிலிருந்து புறப்பட்டருளி அடியேன் க்ருஹத்திற்கெழுந்தருளி உள்ளே பெருமாள் ஸன்னிதித் திருமுன்பே வீற்றிருந்தருளியாயிற்று, அப்போது அடியேன் பாடசாலையில் இருந்தபடியால் ஸ்நிக்தரான ஸ்ரீமான் தாசரதி ஐயங்கார் ஓடிவந்து செய்தியறிவிக்க, அடியேன் குடிசைக்கு ஓடி 'யுகாந்தகாலப்ரதிஸம்ஹ்ருதாத்மந: ஜகந்தி யஸ்யாம் ஸவிகாஸமாஸத, தநௌ மமுஸ் தஸ்ய ந கைடபத்விஷஸ் தபோதநாப்யாகம ஸம்பவா முத:' என்கிற மாககாவ்யச்லோகத்தைச் சொல்லிக் கொண்டேபோய்த் திருவடிகளில் விழுந்து, "முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ! பன்னகாதிபப்பாயலோ! பச்சையாலிலையோ! சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவம் செய்ததிச் சிறுகுடிலென்ருன்" என்ற விதுரர் பாசுரத்தைப் பல்காலும் பிதற்றி, ஈதென்ன பேரருள்! என் கொலம்மான் திருவருள்கள்! என்று அழுது நின்றேன். அந்த நிகழ்ச்சிகளின் விரிவுரை இங்கு வேண்டா. அப்போதே ஸ்ரீ ராமாநுஜனில் விசதம். அப்போது

acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada

அழகியசிங்கர் ' இங்கெழுந்தருளியிருக்கிற தேசிகன் திருக்கோலத்தை ஸேவிக்கப்பண்ணவேணும்'' என்று நியமித்தருள, இது அஸமயமாகு லும் ஸ்வாமி நியமனம் அநதிலங்கநீயம்? என்று விஜ்ஞாபித்துக் கொண்டே திருக்கோலத்தைக் கையில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ஸேவித்தருளச்செய்தேன். ஸேவித்து, புன் முறுவலோடே 'தென்கலைத் திருமண் சாத்தியிருக்கிறீரே' என்று ஸாதிக்க, அடியேனும் முறுவல் பூத்து நின்றேன். அந்த ஸமயவிசேஷத்தை *நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்து உகும்* ....

"இவன் (அண்ணா) தேசிகத்வேஷி தேசிகஸூக்தி தூஷகன்" என்பவர்கள் தேசிகஸூக்திகளில் அடியேன் தெளிவுபெருமல் வெளியிட்டுள்ள ஜிஜ்ஞாஸைகளைப் பரிவாத பரிஹாஸாதிகளில்லாமல் ஆர்ஜவத்தோடு பரிஹரிப்பர்களாகில் அன்னவர்களுக்குத் தொண்டனு வேன். ஸ்வாமி தேசிகன் ஸர்வஜ்ஞராயிருந்துவைத்தும் ''வேண்பெரிய விரிதிரைநீர்வையத்துள்ளே வேதாந்தவாரியனென்றியம்ப நின்றோம், தாண் பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருள ரென்று நாடுவோமே'' என்றருளிச்செய்யும்போது, நம்போன்ற அறிவி லிகளுக்குப் பாசுரமேது.

அடியேனுடைய பலபல ஜிஜ்ஞாஸைகளில் ஏழெட்டை மட்டும் இங்கு விஜ்ஞாபித்து, பரமக்ருபையுடன் பரிஹரித்த ருளவேணுமென்று ப்ராஜ்ஞர்களை ப்ரார்த்தித்து நிற்கிறேன்.

முன்னுரை முற்றிற்று.

1. பரம புருஷனுடைய வ்யாப்தி விஷயம்.

உபநிஷத்தானது *அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:* என்று ஸகல பதார்த்தங்களிலும் எம்பெருமான் உள்ளும் புறமும் வியாபித்திருப்பதாக ஓதியிருக்கின்றது. அணுவான பதார்த்தங்களில் உள்ளீடாக வ்யாப்தி ஸம்பவிக்கமாட்டாதென்றும், அவயவியான பதார்த்தங்களுக்கே உள் வெளியென்று சொல்லக்கூடு மாதலாலும், நிரவயவமான அணு பதார்த்தங்களுக்கு 'உள்ளே வெளியே' என்று சொல்வதற்கு ப்ரஸக்தியில்லாமையாலும் அணு பதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்நிற வ்யாப்தி சொல்ல

acharya.org

வொண்ணாது என்றும் ஒரு வாதம். அன்றியும் ஒரு பொருளிலும் எம்பெருமானுக்குப் பரிஸமாப்யவர்த்தித்வம் [அதாவது - பரிபூர்ண வ்யாப்தி] கொள்ளவொண்ணாது; ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூர்ண வ்யாப்தியை அங்கீகரிக்குமளவில் [அதாவது பகவானுடைய ஸ்வரூபம் ஒன்றிலே பரிஸமாபித்து வர்த்திக்கிறதென்னில்] மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரஸக்தியில்லாமையாலே பரிஸமாப்ய வ்யாப்தியை அங்கீகரிக்கலாகாதென்றும் மற்றொரு வாதம்.

அணுபதார்த்தங்களிலும் அந்தர்வ்யாப்தி தாராளமாக உண்டென்றும், ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்யவர்த்தித்வமும் பொருந்துமென்றும் ஸத்ஸம்ப்ரதாயஸித்தாந்தம்; சாரீரகமீமாம்ஸையில் (ப்ரஹ்ம ஸூத்ரத்தில்) "க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வசப்த கோபோ வா" என்கிற பூர்வபக்ஷ ஸூத்ரத்தின்மேல் "ச்ருதேஸ் து சப்த மூலத்வாத்" என்கிற ஸித்தாந்தஸூத்ரம் அவதரித்துள்ளது. சாஸ்த்ரங்களினால் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்கமூலங்களான குசோத்யங்களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசைய வேண்டுமென்று இந்த ஸூத்ரம் சிக்ஷிக்கின்றது. "அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:" என்று சுருதி ஸ்பஷ்டமாகச் சொல்லி வைத்தது. வேதஞ் சொன்னது ஒருபுற மிருக்கட்டும். வேதார்த்த நிர்ணயகர்களான வேதாந்த மஹாகுரு ப்ரப்ருதிகள் நிஸ்ஸந்தேஹமாக அருளிச்செய்திருப்பது என்ன? என்று பார்ப்போம்.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் திருவடியான திருக்குருகைப் பிரான் பிள்ளான் திருவாய்மொழியில் (1-1-10) "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்" என்கிற பாசுரத்தின் ஆறாயிரப் படியிலே இங்ஙனே யருளிச்செய்கிறார்: "அதிஸூக்ஷ்மமாயிருந்த அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கின்ற சித் வஸ்துக்களிலும் ஸ்தூலமான அண்டத்தில் வியாபித்தாற்போலே அநாயாஸத்தாலே அஸங்குசிதனாய்" என்று. தசோபநிஷத்பாஷ்ய காரரான ஸ்ரீ ரங்கராமாநுஜஸ்வாமி திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப் படியென்று ஸம்ஸ்க்ருத ப்ரதிபதார்த்தகை பணித்துள்ளார். (அச் சிட்டுமிருக்கிறது) அதில் இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் அவர் பணித்திருப்பதாவது: 'ஏகைகஸ்மிந் ஜலபரமாணௌ அதிவிசால

acharya.org

ப்ரஹ்மாண்ட இவ வ்யக்திஷு ஜாதிவத் பர்யாப்தவ்ருத்தி:" என்று இதன் பொருளாவது-வ்யக்திகளில் ஜாதியானது எப்படி பரிஸமாப்ய வர்த்திக்கின்றதாக ஜாதிவாதிகளால் கொள்ளப்பட்டிருக்கின்றதோ, அப்படி எம்பெருமான் ஒவ்வொரு ஜலபரமாணுவிலும் அதி விசால மான ப்ரஹ்மாண்டத்திலிருப்பது போல (நெருக்குண்ணுமல்) நிறைந் திருக்கிருன் என்பதாம். இங்கு "பர்யாப்த வ்ருத்தி:" என்று இம் மஹான் பணித்திருப்பது பூருவர்களின் ஸித்தாந்தத்தை நன்கு அடி யொற்றியதாம். பரிஸமாப்ய வர்த்தமாநத்வமே சொல்லிற்று. ரங்க ரரமாநுஜஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியென்ருல் அது ஸ்வாமி ஸூக்தி யோடொப்ப ஆதரணீயமன்ரே? நேராக ஸ்வாமி ஸூக்தியையே காட்டுவோம். ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஈச்வரபரிச்சேதத்தில் இவ் வாக்ஷேபத்தை யெடுத்துக் காட்டி "ச்ருதேஸ் து சப்தமூலத்வாத்" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தையே தஞ்சமாகக் கொண்டு "யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ பகவாந்" (சாஸ்த்ரம் சொன்னபடி எம்பெருமான் எங்கும் பூர்ணனே- என்று தலைக்கட்டியருளினுர்.

இந்த ஸித்தாஞ்ஜனத்தில் "சதஸ்ருஷு ச மூர்த்திஷு பரிபூர்ண ஏவ" என்றருளிச் செய்துவிட்டு, உடனே 'அந்யத்ர வித்யமாநஸ்ய அந்யத்ர பூர்ணத்வம் ந ஸ்யாதிதி சேத்', என்கிற ஸ்ரீஸூக்தி யுள்ளது. இந்த ஸூக்திக்கு உதயம் எப்படி? என்பதொன்றையே விவேகிகள் விமர்சிக்கவேணும். "ஸர்வத்ராபி பூர்ண ஏவ" என்று ஸாதித்தவுடனே "வேறிடங்களிலுமிருக்கிற ஈச்வரன் ஒரேயிடத்தில் எப்படி பூர்ணனுயிருக்கமுடியும்?" என்று ஒருவன் ஆக்ஷேபிப்பதாக எழுதப்பட்டிருக்கிறதே, கீழ் வாக்கியத்திலிருந்துதானே இந்த ஆக்ஷேபம் தோன்றவேண்டும்; இப்படி ஆக்ஷேபிக்கவேண்டும்படியான விஷயமே கீழ் வாக்கியத்தில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதென்பது கைகொள் கனியாகக் காண்கிறதே; இதை இல்லைசெய்ய யாரால் முடியும்? "ஸர்வத்ராபி பூர்ண ஏவ" என்று ஸாதித்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் "அந்யத்ர வித்யமாநஸ்ய அந்யத்ர பூர்ணத்வம் கதம் பவேத்?" என்று சங்கிப்பதற்கு உறுப்பான அர்த்தமே உறைந்து கிடந்ததென்பது அசைக்கமுடியாதபடி தேறிவிட்டதன்ரே? அந்த பூர்ணத்வந்தான் வஸ்துதோறும் ஸ்வரூபஸமாப்தியென்பது கடைசியாக இவ்விஷயத்தை முடிக்குமளவிலும் வேருெரு சப்தத்தை யிட்டு

acharya.org

முடிக்காமல் "யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ பகவாந்" என்று முதல் முதலிலெடுத்த பூர்ண சப்தத்தையேயிட்டு முடித்தார். இவ்விடத்தில் * க்ருத்ஸ்நப்ரஸக்திரித்யாதி பூர்வபக்ஷஸூத்ரத்தையும் *ச்ருதேஸ்து சப்தமூலத்வாத் * என்கிற ஸித்தாந்த ஸூத்ரத்தையும் தஞ்சமாகக் கொண்டன்றோ விவாத விஷயம் உபஸம்ஹரிக்கப்பட்டது. பிறர் சொல்லுகிறபடி ஸ்வாமிக்குத் திருவுள்ளமிருந்தால் இங்கு இந்த ஸூத்ரத்தை உதாஹரித்தது ஸர்வாத்மநா அப்ரஸக்தமாகுமே. லோகவிஸஜாதீயமான அத்புத சக்தி வாய்ந்த பரமபுருஷனிடத்திலே இது எப்படி ஸம்பவிக்கும்? அது எப்படி ஸம்பவிக்கும்? என்று வாயைத் திறவாதே என்றன்றோ ஸூத்ரகாரர் முடித்திட்டது. அது தானே இங்கு ஸ்வாமியின் முடிவுக்குக் கைகொடுத்தது. அகடிதகட நாசக்தன் பக்கலிலே கூடாததொன்றில்லையென்று சொல்லித் தலைக் கட்டினாராயிற்று. இவ்விஷயத்தில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச் செய்திருக்கிறபடியைப் பார்த்தாலோ அந்தோ! என்ன சொல்லுவது! நியாய ஸித்தாஞ்ஜனகர்த்தா வேறு நபர்; ரஹஸ்யத்ர யஸாரகர்த்தா அந்த ஸித்தாஞ்ஜனத்தைக் கண்ணெடுத்தும் பாராத வேறொரு வ்யக்தி – என்னலாமேயொழிய வேறொன்றும் சொல்ல முடியாதே. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார மூலமந்த்ராதிகாரத்தில் நாராயண சப்தார்த்த விவரணப்ரகரணத்தில்:

> "வ்யாப்தனுக்கு ப்ரதிவஸ்து பூர்ணத்வமாவது:– ஓரொரு உபாத்யவச்சிந்நப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்க வல்ல சக்தியுடைத்தாயிருக்கை. அல்லது வஸ்து தோறும் ஸ்வரூபஸமாப்தியன்று. இது கொள்ளில் பரிவ்யாப்திக்கு விருத்தமாம். இத்தை அகடிதகடநா சக்தியாலே நிர்வஹிக்கில் விருத்த ஸமுச்சயங்கொள் ளும் பரமதங்களிற்படியாம்."

என்று ஸாதிக்கப்பட்டிருக்கிறது. உலகில் எத்தனையோ மதங்கள் இருப்பதுபோலே இப்படியொரு மதமிருந்தால் ப்ரமாதமொன்றுமில்லை. இந்த விஷயத்தை நியாய ஸித்தாஞ்ஜநத்தில் விசிஷ்ய விமர்சித்து ப்ரஹ்மஸூத்ரத்தையெடுத்துக் காட்டி துர்வாதத்தைத் தொலைத்து "அதோ யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ" என்று சீமைத் தீர்ப்பாக எழுதி முடித்துவிட்டு— "ராமன் ராவணனை வதைத்தானென்றால்

acharya.org

"ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம் "ஸமோஹம் ஸர்வபூதேஷு தேவா நாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" இத்யாதி பஹுப்ர மாணங்கள் விரோதிக்குமாகையாலே அது கொள்ளவொண்ணுது: புராணபலத்தாலே அது சொல்லுகிறுேமென்னில் சாஸ்த்ரார்த்த க்ஷேபமே உண்டாகுமத்தனே " என்றெழுதி வைக்குமாபோலே 'அந்யேந்த்ரகம் புவநமந்யத் அநிந்த்ரகம் வா கர்த்தும் க்ஷமே கவிரபூத் அயமந்வவாயே' என்றதொன்றுக்கே சேருமாறு எழுதி வைப்பது என்னேவென்று நாம் மதியெல்லாமுள் கலங்கி மயங்கவேண்டியதாகிறது.

வ்யாக்யாதாவான இஞ்சிமேட்டழகிய சிங்கர் நல்ல சாஸ்த்ரஜ் ஞராகையாலே நியாயஸித்தாஞ்ஜநப்ரஸ்தாவம் பண்ணுமலே அவ் வடத்து ஸ்ரீஸூக்தியை ஸ்மரிப்பித்துத் தெளிவுபெறுத்திவிட்டார். அவரைப்போன்ற வித்வான்களன்றே இந்த நுட்பத்தையறிந்து ரஸிக்கவல்லார். ஆருக்குச் சொல்லுகேன் அன்னேமீர்காள் உங்களுக்குத்தான் சொல்லுகின்றேன். நியாயஸித்தாஞ்ஜநத்தில் "அத: ஸர்வத்ர பூர்ண ஏவ' என்றவிடத்தில் பூர்ணத்வமென்பது பரிஸ மாப்யவர்த்தித்வமன்று என்று ஸ்ரீமத்பரமஹம்ஸ கோழியாலம் ஸ்வாமி வலிதாக எழுதியிருக்கையாலே அதற்கு லவலேசமும் இடமில்லாதபடி. "ஸர்வ(த்ர)பரிஸமாப்தத்வம் பூர்ணத்வம்—என்பதுதான் முக்கியார்த்தம்" என்றெழுதிவைத்திட்டார் அந்த இஞ்சிமேட்டழகிய சிங்கர். நியாய ஸித்தாஞ்ஜனத்தில் ஸர்வத்ரபூர்ணத்வத்தை நிர்த்தாரணம் செய்வ தற்கு ப்ரபலாவஷ்டம்பமாகக் கொண்ட (ச்ருதேஸ்து) இத்யாதி ஸூத்ரம்(பஹிர்வ்யாப்திக்கு விருத்தமாம்) என்றபோது ஏன் நினைவுக்கு வரவில்லை? என்று சங்கித்து ஸமாதானம்எழுதியிருக்கலாம். அஃதில்லை.

---

2. இனி அந்ருஷ்டார்த்த அநுஷ்டானத்தைப்பற்றி.

பரம புருஷார்த்தமான அரும்பெரும்பேறு பெறுதற்கு உறுப்பாக நாம் ஒரு ஸதாசார்யரை ஆச்ரயிக்கிறுேம்; என்றைக்கு ஆச்ரயிக் கிறுேமோ அன்றைக்கு நமக்கு ஸமாச்ரயணமானதாகத் தொன்று தொட்டு வ்யவஹாரம் நிகழ்ந்து வருகிறது. திருவாழி திருச்சங்குகளி ஞல் இலச்சினை பெறுகையாகிற சக்ராங்கனத்தையே ஸமாச்ரயண மென்று உலகம் க்ரஹித்திருக்கின்றது. உண்மையில் ஸமாச்ரயண

acharya.org

மென்பது அவ்வளவேயன்று. "ஆசார்யனை ஆச்ரயித்து அவன் மூலமாக எம்பெருமானை யடிபணிதல்" என்னும் பொருள தான ஸமாச்ரயணமென்கிற சொல்லானது ஆசார்யனால் பெறுவிக்கப்படுகிற பேறுகளுக்கெல்லாம் ஸூசகமாக நிற்கின்றது. ஆசார்யனால் க்ருதக்ருத்யனாகச் செய்விக்கப் பெறுகையே ஸமாச்ரயணமெனப்படுகிறது. பகவதாச்ரயணத்தில் பர்யவஸிதமாகிறது.

இந்த ஸமாச்ரயணத்தையே பஞ்ச ஸம்ஸ்காரமென்கிற சொல்லாலும் வழங்கி வருகிறார்கள். "தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம:, அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ:" என்று யாவருமறிந்த ச்லோகமானது பஞ்ச ஸம்ஸ்காரங்கள் இன்னின்னவை யென்பதை விவரித்துக் காட்டுகின்றது. தாப: என்பது முதல் ஸம்ஸ்காரம். அதுதான் தப்த சக்ராங்கனமென்பது. திருவிலச்சினை யென்பது ஸம்ப்ரதாய வழக்கு. இரண்டாவதான புண்ட்ரஸம்ஸ்காரமாவது த்வாதசோர்த்வ புண்ட்ரதாரணம் செய்வித்தல். மூன்றாவதான நாமஸம்ஸ்காரமாவது "இந்த சிஷ்யன் ஸ்ரீ வைஷ்ணவனாயினான்" என்பதை விளங்கக் காட்டுகின்ற தாஸ்யநாமகரணம். அவரவர்களின் ஸம்ப்ரதாயப்படி ராமாநுஜ தாஸனென்றும் மதுரகவி தாஸனென்றும் ஸ்ரீவைஷ்ணவதாஸனென்றும் இப்புடைகளிலே வழங்கி வருவன காண்க. இனி நான்காவதான மந்த்ர ஸம்ஸ்காரமாவது—திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் என்கிற ரஹஸ்யத்ரயத்தை உபதேசிக்கப் பெறுகை. ஐந்தாவதான யாகமாவது "யஜ—தேவபூஜாயாம்" என்கிற தாதுவிலிருந்து தேறுகிற யாகசப்தம் திருவாராதனத்தைச் சொல்லுகிறதாகையாலே பகவதாராதனத்திற்கு அதிகாரம் பெறுகை; இதற்கு மற்றொரு வகையாகவும் பொருள் கூறுவர். அது நிற்க.

இவற்றுள் நான்காவதான மந்த்ரஸம்ஸ்காரத்தில் த்வயமென்கிற மந்த்ரரத்நமே மிகச் சிறந்தது; ஸமாச்ரிதனை சிஷ்யனை அந்த மந்த்ர ரத்நமே க்ருதக்ருத்யனாக்குகின்றதாக நம் ஆசார்யர்களனைவருடையவும் ஸமகண்டமான ஸித்தாந்தம். இதனாலேயே ஸமாச்ரயண நிஷ்பத்தி யென்றுணர்க. இதுதன்னை ரஹஸ்ய க்ரந்தத்திலே ஸூவ்யக்தமாக எழுதிவைத்து சிலாலிகிதமாக்கிவைத்தனர் நம் வேதாந்ததேசிகன். எங்ஙனேயென்னில், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார க்ருதக்ருத்யாதிகாரத்தில்—

acharya.org

"அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கனமடியாகவுண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப்போந்த நமக்கு அவஸரப்ரதீக்ஷையான பகவத்க்ருபையடியாகவுண்டான ஸதாசார்ய கடாக்ஷவிஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரணாநூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்தபின்பு சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹ ஹேதுக்களை யெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்தவடியவர் தம்மைத திருத்திப் பணிகொள்ளவல்ல ஸர்வசேஷியான ச்ரிய:பதி தன் பேருகத் தானே ரக்ஷிக்குமென்று தேறி நிர்ப்பரனாயிருக்கை; இது "மாசுச:" என்கிற சரண்ய வாக்கியத்திலும தீர்ந்த பொருள்."

என்றுள்ள வாக்கியங்கள் நிஸ்ஸந்தேஹவிபர்யயமாக உண்மைப் பொருளையுணர்த்துகின்றன. மேலே உதாஹரித்த வாக்கியராசியில் "த்வயோச்சாரணாநூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு" என்றும் "சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே" என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகள் ஸாரமானவை. மந்த்ரஸம்ஸ்கார ஸமயத்தில் த்வயமென்னும் மந்த்ரத்தை ஆசார்யன் சொல்ல அதை சிஷ்யன் பின்சொல்லுவதுண்டே இதுதான் ப்ரபத்த்யனுஷ்டானமென்று சொன்னதோடு நில்லாமல் இதற்குமேல் வேறொன்று கிடையாதென்றும் வ்யக்தமாக அருளிச் செய்தாராயிற்று.

இங்ஙனே தமிழில் அருளிச் செய்ததை சரணாகதிகத்ய பாஷ்யத்தின் முடிவில் ஸம்ஸ்க்ருதத்திலுமருளிச் செய்துள்ளனர்; "ஏதேந அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கநமூல பகவத் அப்ரஸாதேந ஸம்ஸரதோமே பகவத்க்ருபாமூலக ஸதாசார்ய அங்கீகாரேண த்வயோச்சாரண அநூச்சாரணபூர்வக ஸ்வரக்ஷாபரந்யாஸே ஸித்தே ப்ரஸாதநேஷு அஸ்மாத் அப்யதிகஸ்ய அபாவாத்......" இத்யாதி ஸ்ரீஸூக்திகள். இப்படியிருக்க, அர்வாசீநர் அத்ருஷ்டார்த்தமென்று ஒன்று நடத்திப் போருவது சாஸ்த்ரங்களிலும் ஸதாசார்யாநுஷ்டாந பரம்பரையிலும் எங்கும் அத்ருஷ்டமான அர்த்தமாதலால் அத்ருஷ்டார்த்தமென்று இதற்குப் பெயரிட்டது மிகவும் பொருத்தமானதே என்னலாம். எம்பெருமானாருடைய சிஷ்ய பரம்பரையிலே ஜனித்தவர்களுக்கு ப்ரபந்நத்வமோ சரணாகதத்வமோ ஜன்மஸித்தமேயாகும். அன்னவர்கள் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொள்வதானது வைஷ்ணவ தீக்ஷார்த்தமாகவத்தனையல்லது மோக்ஷஸாதனமாகவன்று.

acharya.org

நம்முடைய குலகூடஸ்தரான எம்பெருமானுர்க்கு ஸ்ரீரங்கநாத னிடமிருந்து விசேஷித்து ஒரு வரமும் கிடைத்திருக்கிறது அதையும் ஸ்வாமி தாமே ந்யாஸதிலகத்தில் "ச்ருத்வா வரம் ததநுபந்த மதா வலிப்த" என்பதனுல் நன்கருளிச் செய்துள்ளார். அந்த திவ்ய க்ரந்தத்திலே *அந்தோநந்தக்ரஹண* என்றும் *உக்தயா தநஞ்ஜய* என்றுமுள்ள இரண்டு ச்லோகரத்னங்கள் நிதியானவை, *அந்தோநந்த ச்லோகத்தில் ஜ்ஞாநஹீனஞன ஒருவன் குருடனுடைய ஸ்தானத்தி லும், ஆசாரஹீநஞன வொருவன் நொண்டியினுடைய ஸ்தானத்திலும் கொள்ளப்பட்டு இப்படிப்பட்ட அதிகாரிகள் ஞானமனுட்டானமிவை நன்ருகவேயுடையனுன குருவையடைந்தே புருஷார்த்தஸித்தி பெற வேண்டுமென்ருர் ஸ்வாமி தேசிகன்.

இதற்குமேல் மூன்ருவதானவொரு த்ருஷ்டாந்தம் (மூன்ருவது பாதத்தில்) வெகு அற்புதமாகக் காட்டப்பட்டிருக்கிறது. *புங்க்தே போகாந் அவிதிதந்ருபஸ் ஸேவகஸ்ய அர்ப்பகாதி:* என்கிற த்ருஷ்டாந் தம் மிக அற்புதமானது; ராஜஸேவை பண்ணின அமாத்யனுடைய ஸந்ததியார் சாச்வத பலனையனுபவிக்கும்போது அந்த ராஜாவின் முகத் தைப் பார்த்திருக்கவேண்டியதில்லை; அந்த ராஜாவைப் பற்றி ஒன்றுமே தெரிந்துகொண்டிருக்கவேண்டியதில்லை. 'தாம் அமாத்யனுடைய ஸந்ததியே' என்னுமிடத்தை மூதலிக்கவேண்டியதொன்று தவிர வேருெரு க்ருத்யமும் இல்லையன்ருே தத்ஸந்ததியார்க்கு; இதுதான் 'அவிதிதந்ருப:' என்கிற விசேஷணத்திஞல் தெரிவிக்கப்படுகிறது. இதுபோலவே, அமாத்ய ஸ்தாநீயரான எம்பெருமானுருடைய ஸந்ததி யான நாமும், 'நாம் எம்பெருமானுரைச் சேர்ந்தவர்கள்' என்பதை மூதலிப்பது தவிர பேற்றின் ஸித்திக்காகப் பெருமாளுடைய திருமுகத் தையும் காணவேண்டிய ஆவச்யகதையில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரிவித்ததாகிறது. நம்முடைய பூர்வாசார்யர்களின் சரிதைகளில் திருவிலச்சினைக்கு மேற்படவொரு அத்ருஷ்டார்த்தானுஷ்டான மென்பது எங்குங் காணக்கிடைக்காதது.

ந்யாஸதிலகமென்பது ப்ரபத்தி விஷயத்தில் மிகச் சிறந்த நூல். அதில் "அந்தோநந்த க்ரஹணவசக:" "உக்த்யா தநஞ்ஜய" என்கிற இரண்டு சுலோகங்களும் திலகமானவை. *அந்தோநந்தச்லோகத்தில் பூர்வார்த்தத்தில் காட்டின இரண்டு த்ருஷ்டாந்தங்களும் ஆசார்ய

acharya.org

சிஷ்யர்களின் ஸமகாலிகத்வத்தையுட்கொண்டவை; உத்தரார்த்தத்தில் காட்டின ராஜஸேவக வம்சபரம்பராத்ருஷ்டாந்தம் வ்யவஹித காலவர்த்திகளுக்கும் பேறு தப்பாதென்பதை உட்கொண்டது. அத்யந்தம் வ்யவஹித காலவர்த்திகளுக்கும் பேறு தப்பாதென்னுமிடத்தை ஸ்ரீ பாஷ்யத்தின் மங்கள ச்லோகத்தில் "விநதவிவித பூதவ்ராதரக்ஷைக தீக்ஷே" என்றவிடத்து ச்ருத ப்ரகாசிகையில் உபபாதித்திருப்பதை ஸேவித்த வேதாந்த தேசிகன் தத்வடீகையில் அதேயிடத்தில் விபுலமாக நிரூபித்து அதைத் திடப்படுத்தினர். *விநதவிவிதேத்யாதியில் வ்ராத சப்தத்திற்கு வையர்த்த்யம்வாராமைக்காக, ப்ராஹ்மண பரிஷத்-ராஜபரிஷத் என்கிற இருவகைப் பிரயோகங்களையெடுத்துக்காட்டி உபபாதித்திருக்கும் விஷயங்களைப் பலகால் விளக்கியிருக்கின்றேன். அதனால் மிக்க தெளிவு பெறலாமே.

(நியாஸதிலகத்தில) *உக்த்யா தநஞ்ஜய' இத்யாதி ச்லோகத்தாலே ஒரு அஸாதாரண விஷயமருளிச் செய்கிறார். அதுதான் உயிரானது "ச்ருத்வா வரம் ததநுபந்த மதாவலிப்தே" என்கிற மூன்றும்பாதம் ஜீவநாடியானது. இதில் ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீ பாஷ்யகாரர்க்கு ஒரு வரம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த வரம் இன்னவிதமென்பதை (நியாஸதிலக) ஸம்ஸ்க்ருத த்ராவிட வ்யாக்க்யாதாக்கள் நிஸ்ஸந்தேஹமாக எழுதி வைத்துள்ளார்கள். ஸம்ஸ்க்ருத வியாக்கியானம் பலகால் அச்சிடப்பட்டு உலகம் பரவியிருக்கின்றது. பகவத் ராமாநுஜ ஸம்பந்த ஸம்பந்த ஸம்பந்திகளுக்கெல்லாம் ஸ்ரீ ராமாநுஜ ஸம்பந்தமே ஹேதுவாக முக்தியுண்டாகக் கடவதென்று வரமளித்ததாக வியாக்கியானங்கள் உண்மையை மறைத்திடாமல் வெளியிட்டுள்ளன. இவற்றை அச்சிட்டவர்களோ பரமைகாந்திகளான திருக்குடந்தை வித்வன்மணிகள்; வரஸ்வருபத்தை இங்ஙனேயிசையாமல் 'அப்படியன்று வரம்; இப்படிகாணும்" என்று மரத்தின் நுனியிலே யுட்கார்ந்து அடிமரத்தை வெட்டுகிற கணக்கிலே சொல்லப் புறப்பட்டார்கள்; ஸ்வாமி "ச்ருத்வா வரம்" என்றவுடனே "ததநுபந்த மதாவலிப்தே" என்று ஸாதித்திருக்கிறரே, இதற்குச் சேர வரஸ்வருபத்தைச் சொல்லவேண்டுமே! என்று நாம் சொன்னவுடனே திகைத்து நின்றுர்கள். பகவத் பாஷ்யகாரரோடு வ்யவஹித ஸம்பந்தங்கொண்ட ஸ்வாமி வேதாந்தகுரு "ததநுபந்த மதாவலிப்தே" என்னும்போது அநுபந்தத்தைக் கவ்வியன்றே வரஸ்வருபம் நிருபிக்கப்படவேண்டும் என்றவாறே ஆமாம்! ஆமாம்!! என்று

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

அஞ்ஜலிபந்தம் பண்ணிச்சென்றார்கள். ஆக இவ்விஷயத்தில் மற்ற விரிவுகளை விட்டிட்டு "ச்ருத்வா வரம்" என்றதொன்றையே விமர்சித்தல் பாங்கு.

Released by Maran's Dog ,Toronto, Canada

"ஜ்ஞாத்வா வரம்" என்னாதே ச்ருத்வா என்றதன் ஸ்வாரஸ்யத்தையும உணரவேணும்; "ஆப்தை: ச்ராவிதம்" என்கிறார்கள் வியாக்யாதாக்கள். ஆகவே அநாப்தர்கள் கூறுவது இங்கு விலை செல்லாது. *பஞ்சாசார்ய பதாச்ரிதரான எம்பெருமானார் இன்னின்ன ஆசாரியர்களிடத்தே இன்னின்னது பயின்றார் என்பதை குருபரம்பரா ஸாரத்தில் விளக்கியருளாநின்ற ஸ்வாமி தேசிகன், இன்ன ஆசார்யர் பக்கலிலே அத்ருஷ்டார்த்தம் செய்துகொண்டாரென்பதையருளிச் செய்திருக்கிறாரா? என்று பார்க்கவேணும். முக்கியமாக ஸ்பஷ்டமான தேசிக திவ்ய ஸூக்திகளைப் பார்ப்பது போதுமே.

Released by Maran's Dog ,Toronto, Canada

இச்சிறுநூலில் அடியேன் நிரூபிக்கும் ஒவ்வொரு விஷயமும் ஸம்க்ஷிப்தமாகவேயுள்ளது, ஜிஜ்ஞாஸா பரிஹாரம் பண்ணவேணுமென்கிற ருசியும் அருளுமுடையவர்கள் அடியேனுடைய நூல்களையெல்லாம் கடாக்ஷித்தருளவேணும். புதிதாகக் கடாக்ஷித்தருள வேண்டியதுமில்லை. இனி அடுத்த விஷயத்திற் செல்லுகிறேன். ... ... *

Released by Maran's Dog ,Toronto, Canada

3. ப்ரபத்த்யுபாயத்வவிசாரம்

ப்ரபத்த்யுபாயத்வத்தில் இனி சர்ச்சை செய்வோம். தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளை ஆழ்ந்து பார்த்தாலும் ஸரி, மேலெழப் பார்த்தாலும் சரி, நம் வாயால் உபாயம் என்கிற சொல்லைச் சொல்லுவதற்கே யோக்யதையில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆளவந்தாரருளிய *நிஜகர்மாதிபக்த்யந்த மித்யாதியான கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகத்தின் பாஷ்யத்திலே ஸ்வாமி தேசிகன்

Released by Maran's Dog ,Toronto, Canada

"ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி
பலஸாதநத்வ அநுபபத்திதர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யா
பாரே மோக்ஷோபாயதவ புத்திரபி ஸ்யாத் இதி பாவ:;
அந்தத: தைஸ்தை ராராதிதோ பகவாநேவ ஹி
ஸர்வத்ர உபாய:" என்றருளிச்செய்தார்.

acharya.org

இந்த ஸ்ரீ ஸூக்தி ஒன்று போதாதா? இந்த வாக்யராசியில் ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயத்வம் நோபபத்யதே என்னுமல் அஸ்ய ஸ்வவ்யாபாரோ மோக்ஷோபாயதாபுத்தி ரபி ந ஸ்யாத் என்றருளிச் செய்ததை அரண்யருதிதமாக்குவதுமுண்டா? நியாயஸித்தாஞ்ஜனத்தில் "இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா, ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிம் புநஸ் ஸஹகாரிணும்" என்று காரிகை யிட்டிருப்பதொன்று போதுமே. *ஸ்வப்ராப்தென ஸ்வயமேவ ஸாதநதயா ஜோகுஷ்யமாண: ச்ருதெள* என்று கல்வெட்டாக அவர்தாமே ஸாதித்திருப்பதொன்று போதுமே. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார சரமச்லோகாதிகாரத்திலுள்ள

"*கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்* என்கிறபடியே ஜீவனுக்கு கர்த்ருத்வம் ப்ராமாணிகமே யாகிலும் இது பராதீனமுமாய் அல்பவிஷயமுமாய் ப்ரதிஹதி யோக்யமுமாயிருக்கும் ஆகையால் இவன்தான் உபாயாநுஷ்டானம் பண்ணிற்றும் *வரத! தவ சலு ப்ரஸாதாத் ருதே சரணாகதி வசோபி மே நோதியாத்* என்று சொல்லுகிறபடியே அவன் கடாக்ஷமடியாக வருகையால் அவனாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாதபோது நீட்ட முடக்க மாட்டாதே அவன் கொடுத்த கரணகளேபரங்களைக் கொண்டு அவன் காட்டின வுபாயத்தை அவன் துணை செய்ய அநுஷ்டித்து அவனால் கொடுக்கப்படுகிற பலத்துக்கு சாதகம்போலே அன்னுந்திருக்கிற விவனை ஸ்வாதீந ஸர்வவிஷய அப்ரதிஹத கர்த்ருத்வமுடையவனோடே துல்யமாக இரண்டாம் ஸித்தோபாயமாக வெண்ணுகை விவேகியான முமுக்ஷுவுக்கு உசிதமன்று.... *என்னுணர்வினுள்ளே யிருத்தினேன் அதுவுமவனதின்னருளே யென்றும் *இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழிருத்து மம்மானே யென்றுஞ் சொல்லுகிறபடியே உபாய பூதனை அவன் செய்விக்கச் செய்கிற வ்யாஜமாத்ரத்தை அவனோடொக்க உபாயமாக வெண்ணுகை உசிதமன்றென்று ஏகசப்தத்துக்கு தாத்பர்யம்" என்கிற ஸ்ரீ ஸூக்திகளால் தெளிவு பெருதவர்களுக்கு நாம் என்ன சொல்லவல்லோம்.

acharya.org

பிள்ளை லோகாசாரியர் ப்ரபத்தியைப் பற்ற "அதிகாரி விசேஷணம்-ஸம்பந்தஜ்ஞானமாத்ரம்-ஸித்தோபாயப்ரதிபத்திமாத்ரம்-அநிவாரணமாத்ரம்-சைதந்ய கார்யம்-சித்தஸமாதாநார்த்தம்," என்றெழுதியிருப்பதைக்கண்டஸ்வாமி தேசிகன் அதுபொருந்தாது, அது இணங்காது அதிகாரி விசேஷணத்துக்குச் சொல்லுகிற லக்ஷணத்திற்குச் சேராது' என்றிப்படியெல்லாம் சரமாரி பொழிந்துவிட்டார் ஸாரத்திலே; பிறகு ஸாரஸாரமென்றொரு ரஹஸ்யம். ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஸாரமென்று அதற்குப் பொருள்; அதில் சரமச்லோகாதிகாரத்திலே

"இப்படி விதேயமான ப்ரபதனத்தைச் சிலர் அதிகாரி விசேஷணம் ஸம்பந்தஜ்ஞானமாத்ரம் அநிவாரணமாத்ரம் அநுமதிமாத்ரம் அசித்வ்யாவ்ருத்திமாத்ரம் சைதந்யக்ருத்யம் சித்தஸமாதாநார்த்தம் என்றுப்போலே சொல்லுமதுவும்-இவ்விதிக்கும் இத்தை விஸ்தரிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும் பாஷ்ய கத்யாதிகளுக்கும் அநுகுணமாக வேண்டுகையாலே *நானே நானாவித நரகம்புகும் பாவஞ்செய்தேனென்று நிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிற விடத்தில் *வந்தடைந்தேனென்று நாம் பண்ணுகிற அல்பமான வசீகரணயத்னம் *அதுவுமவனதின்னருளே* இசைவித்தென்னையுன் *தாளிணைக்கீழிருத்துமம்மானே! இத்யாதிகளிற்படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜமாத்ரமன்றோவென்று ஸித்தோபாயப்ராதாந்யாநுஸந்தானத்தில் அவர்களுக்கு தாத்பர்யம்" என்றெழுதியிருப்பதை உற்றுநோக்கவேணும். "அநுகுணமன்று" என்று கண்டித்த விஷயமன்றோவது. அதை(அநுகுணமாகவேண்டுகையாலே) என்று இங்கே ஸாதிப்பது எதனால்; தெரியுமோ? ஸ்வாமி திருவெள்ளறைக்கு எழுந்தருளியிருந்தபோது அங்கு உபதேசம் கேட்பித்த ஆசாரியர்கள் ஆநுகூண்யத்தையுபபாதித்தபடியாலே. இது த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி பணித்த வைபவப்ரகாசிகையில் ஸ்பஷ்டம்.

ஒரு பண்டிதர் தம்மிற் சிறந்தவொரு மஹாபண்டிதருடைய நாலொன்றைக் கண்டார். அப்பண்டிதரின்மீது இவர் நிஷ்காரணமான மாச்சரியங்கொண்டிருந்ததனால் அவரது நூலில் ஏதேனும் குற்றங்குறை கூறவேணுமென்று கொண்டு அதில் ஆதியில் விஜயதே என்றும் அந்தத்தில் விரமாம: என்றுமிருந்ததைக் கண்டு, தூஷிக்க இடம் கிடைத்துவிட்டதென்று மகிழ்ந்து, "ஜி-ஜயே என்கிற தாது பரஸ்மை பதியாதலால் விஜயதே என்று ஆத்மநேபதியாக ப்ரயோகித்தது

acharya.org

அபத்தம்; ரமுதாது ஆத்மநேபதியாயிருக்க விரமராம: என்று பரஸ்மை பதியாக ப்ரயோகித்தது அபபத்தம் என்று எழுதித் தீர்த்து வெளியிட்டும் விட்டார். அதுகண்ட வையாகரணர்கள் சிரித்து ஸூத்ரமுணர்த்திய பின்பு, தெளிந்த அவர் ''ஜிதாது பரஸ்மைபதியாயும் ரமுதாது ஆத்மநேபதியாயுமிருக்கச் செய்தே விஜயதே என்றும் விரமாம: என்றும் ப்ரயோகித்தவர்களுக்கு ''விபராப்யாம் ஜே: என்கிற ஸூத்ரத்தோடும் *வ்யாங்பரிப்யோ ரம:" என்கிற ஸூத்ரத்தோடும் சேரவேண்டுமென்பதிலே தாத்பரியம்'' என்றெழுதிவைத்தாராம். அதுபோலவன்றோ வுள்ளது.

*அதுவுமவனதின்னருளே *இசைவித்தென்னை யுன்தாளிணைக் கீழிருத்துமம்மானே என்றவை ஏதோ வார்த்தைப்பாடாகச்சொன்னவையேயொழிய சாஸ்த்ரார்த்தமன்று-என்று எழுதிவைக்கக் கைவரவில்லை. கீழே உதாஹரித்த ரஹஸ்யத்ரயஸார சரமச்லோகாதிகார ஸூக்தி ராசியில் இந்த ப்ரமாணங்களைத் தாமே யுதாஹரித்து தாமே நிஷ்கர்ஷித்து இதுவே சாஸ்த்ரார்த்தமென்றது அடிக்கடி விஸ்ம்ருதமாகிறது.

ஸ்வாமி தாமே விரோதபரிஹாரமென்றொரு ரஹஸ்யம் ஸாதித்தருளியுள்ளாரே. அதில் மூலமந்த்ராதிகாரத்திலும் தாத்பர்யம் ஸாதிக்கிறபடி பாரீர்;—

''பக்திபோலே ப்ரபத்தியும் சோதிதமான உபாயமாய் நின்றது. ப்ரஸாத வ்யவஹிதமாகையாலே ஸாக்ஷாத் பலஹேதுவன்றென்னுமிடம் பக்த்யாதிகளுக்கும் துல்யமாயிருந்தது. இப்படியிருக்க ப்ரபத்தியை உபாயமன்றென்று விசேஷித்துச் சொல்லுமவர்களுக்கு தாத்பர்யமென்னென்னில் சாஸ்த்ரங்கள் பக்தியைப் போலே ப்ரபத்தியையும் உபாயமாக விதிக்கச்செய்தேயும் இவ்வுபாயத்தினுடைய அநுஷ்டான சரீரத்தைப் பார்த்தால் பரந்யாஸ ப்ரதாநமாய் நீயே உபாயமாகவேண்டுமென்று அபேக்ஷிக்கிறபடியே பரஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு உபாயாந்தரஸ்தானத்திலே நிற்கிற ஈச்வரனுடைய நிரபேக்ஷாபாயத்வம் இவ் வித்யைக்கு வேத்யாகாரமாய் நிற்கையாலே வித்யாந்தரங்களிற் காட்டில் இவ்வாசியைப் பற்ற ப்ரபத்தியை உபாயமன்றென்றார்கள்....''.

acharya.org

என்றருளிச்செய்தார். இது பரகீய தாத்பர்யமா? ஸ்வகீயதாத்பர்யமா? ஸகல சாஸ்த்ர தாத்பர்யமா? என்பதைச் சற்று விசாரிக்கவேணும். மேலே காட்டின தமிழ் வாக்யத்தை அப்படியே ச்லோகமாக்கினர் ந்யாஸதிலகத்திலே "ஹேதுர் வைதே விமர்சே பஜநவத் இதரத் கிந்த்வநுஷ்டாநகாலே வேத்யஸ் த்வத்ரூபபேதோ விவித இஹ ஸதூபாயதா அந்யாநபேக்ஷா" இத்யாதி. இந்த விரோத பரிஹார வாக்யராசியில் ப்ரபத்தியை உபாயமன்றென்றுவிசேஷித்துச் சொல்லுகிறவர்களுக்கு" என்றதை உற்றுநோக்கினல் எதுவுமே உபாயமன்று என்பதுதான் ஸ்வாமி திருவுள்ளமென்று தேறவில்லையா!

ப்ரபத்தியை அதிகாரி விசேஷணமென்று சொல்லுவது சாஸ்த்ர விருத்தமென்றும், அதிகாரி விசேஷணத்துக்குச் சொல்லுகிற லக்ஷணம் இதில் ஸமந்விதமாகாதென்றும் ஒருமருள் அர்வாசீநர்களின் மூளையைக் கலக்கிக்கொண்டேயிருக்கிறது. "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க காமோ யஜேத" என்றவிடத்தில் ஸ்வர்க்ககாமனை அதிகாரி விசேஷண மெனப்படுகிறது. எது விதிக்கு விஷயமாகாதோ அதை அதிகாரி விசேஷணமென்னலாம். மாமேகம் சரணம் வ்ரஜ என்று விதிகோசரமான ப்ரபதனத்தை அதிகாரி விசேஷணமென்னப்போகாது என்பது ஆக்ஷேபஸாரம்.

எம்பெருமானை உபாய மென்னும்போது ப்ரபலமான ஆக்ஷேபம் விளைகிறது. ஸாத்யஸித்த்யநந்தரம் பரித்யஜ்யமாநத்வம் உபாயத்வம். நதீநிஸ்தரணத்திற்கு உபாயமாகக்கொண்ட ஓடத்தை நதீநிஸ்தரணாநந்தரம் விட்டுவிடுகிறோம். இவ்வண்ணமாக எம்பெருமானை உபாயமாகக்கொண்டால் உபேயம் ஸித்தித்தவுடனே அவன் விடப்பட்டவனாக வேணும். ஆகவே உபாயலக்ஷணம் ஈச்வரனிடத்தில் பொருந்தாது. பொருந்தாததாயிருக்க எப்படி உபாயமென்கிறோமென்ன "இவன் செயலறுதியாலே உபாயமாக்குகிறனித்தனை" என்று முமுக்ஷுப்படியிலே பிள்ளைலோகாசார்யரருளிச்செய்ததை ரஸிகமஹிதே ரங்காஸ்தானே வித்வத்ஸேவாவிமலமநஸ்கரான ஸ்வாமி "நாண்பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே" என்றதற்கேற்ப நாடிஸேவித்து அந்த ஸ்ரீஸூக்தியின் கருத்தைக்கேட்டறிந்து அதை நியாஸதிலகத்தில் "த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம்" என்கிற ஸூக்தியாலே விளங்கவைத்தார். எம்பெருமானுக்கே உபாயத்வம் ஊசலாடிக்கொண்டிருக்க......

acharya.org

ஆலம்! அலம்! அலம் !!!

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் "த்ராணே ஸ்வாமித்வமௌசித்யம் ந்யாஸாத்யாஸ் ஸஹகாரிண:, ப்ரதாந ஹேது: ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா கருணா விபோ:" என்கிற காரிகை தேசிகனுடைய ஸூக்தி தானே, இதற்கு என்ன அர்த்தமென்றால் எம்பெருமான் ஸர்வஸ்வாமியாகையாலே, ஸொத்துக்களினுடைய ரக்ஷணம் ஸ்வாமியைச் சேர்ந்ததாகையாலே அந்த ஸ்வாமித்வந்தான் அஸ்மதாதிகளை ரக்ஷிக்கைக்கு உறுப்பாகிறது; அவன் தானேயுண்டாக்கிவைக்கிற ப்ரபதநாதிகள் வ்யாஜரூபங்களான ஸஹகாரிகளாகின்றன; நிரங்குசஸ்வதந்த்ரனுடைய கருணையொன்றே மூலகாரணமாகிறது என்கிற அர்த்தம் தவிரவேறு அர்த்தமுண்டென்று சொல்ல முடியுமா?

மதபேதங்களையுண்டாக்கினவன் ஈச்வரனேயாகையாலே உலகில் பலபல மதங்கள் உண்டாகியிருப்பது வியப்பன்று; அஸம்பாவிதமன்று; பிராட்டி உபாயந்தானென்றும், ப்ரபத்தி உபாயந்தானென்றும். ஒரு மதம் இருக்கலாம். இந்த மதத்தை ஏகாக்ரமாக ப்ரவசனம் செய்து கொண்டு போவதோ. க்ரந்தங்களினால் விவரணம் செய்துகொண்டு போவதோ யுக்தமாகுமேயொழிய அயுக்தமாகாது. தத்வ முக்தா கலாபத்தில் "இஹஜடாம் ஆதிமாம கேசிதாஹு:" என்று நித்யவிபூதியைச் சிலர் ஜடமென்கிறார்கள் என்னப்பட்டது. ஐயோ? நித்ய விபூதியையா ஜடமென்பது, என்று யாரும் ஹாஹாகாரம் செய்யவில்லை அப்படியொருமதம் என்றிருக்கிறேமல்லவா? அதுபோலவே பிராட்டி உபாயம் என்கிறமதத்தையும், ப்ரபத்தி உபாயமென்கிறமதத்தையும் செவ்வனே எழுதிவைத்தால் தவறென்றுமில்லை நிஷ்கர்ஷமாக ஒரேபக்ஷமாக நிற்கவில்லையே! ஸ்வாமியின் திவ்யஸூக்திகளில் ந்யாஸதசக மென்பது மஹாநிதியாகவன்றோ மதிக்கத்தக்கது. அதில் "ஸ்வாமீ ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்ப்பரம், ஸ்வதத்தஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்" என்பது எவ்வளவு ஸாரமான ஸ்ரீஸூக்தி. ப்ரத்யக்ஷரலக்ஷமன்றோ கொடுக்கவேணும். இதில் ஸ்வபதத்தை எத்தனை தடவையிட்டிருக்கிறாரென்று பார்க்கவேணும். உத்தரார்த்தத்தில் "ஸ்வதத்தயாதியா" என்றால் போதாதா? இடையிலே யொரு ஸ்வபதமா? இதில் ஒவ்வொரு ஸ்வபதமும் அர்த்தபுஷ்டியுடையதன்றோ?

acharya.org

— இனி பிராட்டியின் உபாயத்வ சோதனம். —

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸித்தோபாய சோதனாதிகாரத்தில் "இப்படி நாராயண சப்தத்தில் ஸித்தமான குணவிசேஷஸம்பந்தங்களடியாகப் பிறக்கும் கலக்கங்களுக்குப் பரிஹாரம் உதாஹரித்தோம்" என்று ஒரு விஷயம் தலைக்கட்டி "இனி ஸபத்நீகனாய்க் கொண்டு ஸர்வரக்ஷணயஜ்ஞதீக்ஷிதனான ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீமச்சப்தத்திலே சொல்லுகிற பத்நீஸம்பந்தத்தில் வரும் கலக்கங்களுக்கு திங்மாத்ரத்தாலே பரிஹாரம் காட்டுகிறோம்' என்று அடுத்த விஷயம் விவரிக்கத் தொடங்கின வாக்ய ராசியிலே (அதாவது, "நிஜ முக தோஷம் நிர்மலேஷ்வபி தர்ப்பணேஷு ஸமர்ப்பயந்தி" என்ற ஸங்கல்பஸூர்யோதய திவ்யஸூக்திஸ்மாரகமான வாக்யராசியில்)-

"ஸ்ரீஸூக்த பாஷ்யத்தில் பெரிய ஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார்"

என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அபேக்ஷிதார்த்தங்கள் எவை? உபபாதித்தவிதம் யாது? உபபாதித்த ஸ்ரீஸூக்தபாஷ்ய ஸ்ரீஸூக்திகள் எவை? என்னுமிவ்வளவே நமது ஜிஜ்ஞாஸை. நஞ்சீயருடைய ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் "லக்ஷ்மீம் அநபகாமிநீம்" என்றவிடத்தில்— "ந அபகச்சதீதி, ந அபகமயதீதி ச த்வேதா வ்யுத்பத்தி:. ஸ்ரீ: நகதாபி விச்லிஷ்யதி, ஆச்ரிதஜநாந் ந கநாபி விச்லேஷயதி ஸமுசிதைருபாயை: புருஷகாரக்ருத்யைச்ச" என்கிற பங்க்திகள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றால் என்ன லாபமோ? தெரிவிக்கவேணும்.

ஸ்ரீமத் இஞ்சிமேட்டழகிய சிங்கர் தாமருளிச் செய்த ஸாரபோதினியென்னும் வியாக்கியானத்தில் "பெரியஜீயரும் — நாராயணமுனியென்கிற நஞ்சீயரும்" என்றிவ்வளவே காண்கிறது. இது கிடக்கட்டும். இதற்குமேலே—"இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிக அர்த்தங்கள் தோற்றச்செய்தேயும் பற்றினது விடாதொழியில்........' என்றருளிச் செய்கிறார். இங்கும் ப்ரபல ஜிஜ்ஞாஸையுள்ளது. இப்படி தோற்றின ப்ராமாணிகார்த்தங்கள் எவை? பற்றினது விடாதே சொல்லும் அர்த்தங்கள் எவை? அப்படிச் சொல்லுகிறவர்கள் தாம் யாவர்? என்கிற கேள்விகளுக்கு விடை வெளிவந்தால் போதுமே. எம்பெருமானுக்குப்போலே பிராட்டிக்கும் மோக்ஷப்ரதத்வம் உண்டென்

acharya.org

பதுதானே அர்வாசீநர்களின்வாதம். இதை ஸ்வாமி தேசிகன் கண்டிப்பவரேயொழிய இசைந்தருள்பவரல்லரே. தமது ரஹஸ்ய ரத்நாவளியில்-

> "ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்....... ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரியபிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்"

என்றருளிச் செய்து. இதை ரஹஸ்ய ரத்நாவளீஹ்ருதயமென்கிற அடுத்த ரஹஸ்யத்திலே தாமே விவரித்தருளுகிறார். உண்மையில் விவரணாபேக்ஷையே யில்லாத விடமன்றோவிது. அப்படியிருந்தும் விவரித்தருளுகிறார். அது வீணான விவரணம் என்று நினைக்கவொண்ணாதபடி ஒரு விசேஷமும் அதில் வைத்திருக்கிறார். அதாவது தஞ்சமாகிறாளென்பதற்கு ரக்ஷணஹேதுவாகிறாள் என்று விவரணம் காட்டப்பட்டது. தோழுந்தூராண்டவன் விநோதமான ஒரு இதிஹாஸம் ஸாதித்தாகும். அதாவது ஒருநாள் கனவிருளிலே தம்முடைய பிதா ஆமருவியப்பன் ஸன்னிதிக்கு எழுந்தருள, ஸன்னிதியிலிருந்து ஒருவர் எதிரேவர, அவர் இருட்டினால் ஒன்றும் தெரியாமல் பிதாவின் மண்டையின்மேல் மோதிவிட்டாராம்; பிறகு இவரைத் தெரிந்துகொண்டு "ஐயோ! அபசாரத்துக்கு ஹேதுவாச்சுதே" என்று சொல்லிச் சொல்லி அநுதபித்தாராம்; அது கேட்ட பிதா 'அப்பா! அபசாரத்துக்கு ஹேதுவே இப்பாடுபடுத்துகிறதே, அபசாரமே உண்டாய்விட்டால் அது எப்பாடு படுத்துமோ!" என்றாராம். இவரோ வித்வான். அவரோ யதாஜாதர். அபசாரமாச்சுதே! என்று சொல்லவேண்டியிருக்க, அபசாரஹேதுவாச்சுதே! என்று சொன்னது தவறென்று சிக்ஷித்தபடி. அந்த யதாஜாதர் அதைத் தெரிந்துகொள்ளாமல் திருப்பித் திருப்பி 'ஐயோ அபசார ஹேதுவாச்சுதே' என்றே உருப்போடுகிறாராம். அப்படியே இங்கும் ரக்ஷண ஹேதுவாகிறாள் என்பதில் ஹேது பதம் அஸ்தாநே ப்ரயுக்தமென்று அபிப்பிராயமா? "ஸர்வேச்வரன் ரக்ஷண ஹேதுவாகிறான்" என்று எங்கேனும் யாரேனும் சொல்லியிருப்பதுண்டோ? இதைச் சிறு விஷயமென்பதா? பெருவிஷயமென்பதா? இப்படி நிஸ்ஸந்தேஹமாக அருளிச் செய்தவிடங்கள் ஒன்றிரண்டல்ல, பலபல விடங்கள்.

acharya.org

சதுச்ச்லோகியில் மூன்ருவது சுலோகத்தின் பாஷ்யத்தில்:- "மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷுஜனம் கடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வ ஸம்மதம்" என்றருளிச் செய்திருப்பது ஒன்று போதுமே. 'எம்பெருமான் தான் மோக்ஷமளிப்பவன், அதனைப் பெறுவிப்பவளாக மட்டும் பிராட்டியிராநின்ருள்' என்பதுதானே இந்த ஸம்ஸ்க்ருதஸூக்தியின் பொருள். அதற்கு மேலுள்ள ஸ்ரீஸூக்திகளும் பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்பதையே நிலைநாட்டுவனவே. 'அஸ்தி கர்மார்ஹபலதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரிய:, நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே' என்கிற தேசிகனுடைய காரிகை கண்ணுடிபோல் விளங்கா நிற்கக் கண்டுவைத்தும் மருள்வதே! பகற்கண்ட குழியிலே இரா விழுவதுண்டு. பகலிலேயே விழுவதுமுண்டோ? என்று திருவாழ்மார்பன் பணிக்கும் வார்த்தை.

த்வயத்தில் பூர்வகண்டத்தில் பிராட்டிக்கு உபலக்ஷணத்வமா? விசேஷணத்வமா? என்று ஒரு விவாதத்தைக் கிளப்பிக்கொண்டு உபலக்ஷணத்வமென்று யாரோ வாதிப்பதாக வைத்து ஒரு தூஷணம் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரந்துள்ளது.

இஞ்சிமேட்டு ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் அடியேனுடைய குடிலுக்கு அருகில் எழுந்தருளியிருந்தபோது இந்த உபலக்ஷணத்வ விசேஷணத்வசர்ச்சை எம்முள் வலிதாக நடந்தது. உபலக்ஷணத்வத்தை நமது ஸம்ப்ரதாயத்தில் யாரும் சொல்லவில்லையென்றும், சொல்லவும் முடியாதென்றும் பரக்க நிரூபித்தேன். இதை ஸ்வாமி திருவுள்ளமுகந்தார். அதை மறவாமல், இருபதாண்டு கழித்துத் தாம் வியாக்கியானம் ஸாதித்தருளும்போது அந்த இடத்தில் "இந்த உபலக்ஷணத்வத்தை ஏகதேசிகளும் சொல்லவில்லை, சொல்லவும் முடியாது" என்று அடியேன் விஜ்ஞாபித்தபடியே எழுதி அச்சிட்டு வைத்திருக்கிருர். எடுத்துக் காணலாம். தேசிகன் திருவுள்ளத்தை அர்வாசீநர்கள் சொல்லுகிறபடி கொண்டால், பட்டருடைய அஷ்டச்லோகியில்— "ஈசாநாம் ஜகதாம் அதீசதயிதாம் நித்யாநபேதாம் ச்ரியம் ஸம்ச்ரித்ய, ஆச்ரயணோசிதாகில குணஸ்ய அங்க்ரீ ஹரேராச்ரயே, இஷ்டோபாயதயா, ச்ரியாச ஸஹிதாயாத்மேச்வராயார்த்தயே கர்த்தும் தாஸ்யம்" என்ற ஸ்ரீ ஸூக்திக்குக் கண்டனமாகவே தேறும்" என்று இதையும் இஞ்சிமேட்டு ஸ்வாமியே ஸாதித்தார். இதைப்பற்றி அடியேனுக்கு ப்ரபலஜிஜ்ஞாஸையுண்டு.

(தொடரும்)

acharya.org